Registered No. M. 878.

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கில௴
15௳யில் பிரசுரமாகி நடைபெறும்

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 4. { 1913௵ செப்டம்பர்௴ 15௳ / பிரமாதீச௵ ஆவணி௴ 31௳ } பகுதி 5.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTENTS.)

1. பிரக்ஞா பாரமிதை—ப. நா. 143
Pragnaparamita— P. Narayana Iyer.
2. மரணபயம் வேண்டாம்—ப. நாராயண ஐயர். 145
Fear not death—P. Narayana Iyer.
3. கர்மம்—இசக்கியாடும் பெருமாள் பிள்ளையவர்கள். 153
Karma—Esakiadum Perumal Pillai.
4. அஹல்யா சாப விமோசநம்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர். 161
Curse of Ahalya discharged–R. Srinivasa Iyer M. A.
5. துகாராம் பாவாவின் சரித்திரம்—ஏ. சிவராவ் 169
Life of Tukaram Baba—A. Siva Rao.
6. பிரஹ்மக்ஞாநதர்சநம் (பாலபாடம்) வி. வெங்குசாமி ஐயர் 177
Elements of Theosophy—V. Vengusamy Iyer.
7. புஸ்தகவரவு—பத்திராதிபர். 180
Review of books—Editor.
8. சமாசாரம்—பத்திராதிபர். 181
News—Editor.

ஐந்து ஸஞ்சிகைகள் வெளியாய் விட்டன.

பக்தமாலா வசனம்.

ஸ்ரீ சாது பாலகிருஷ்ண முதலியாரால் மகாராஷ்டிர பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இதை வாசிப்பதினால் தெய்வ பக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலியன இருபாலர்க்கும் செவ்வனே உண்டாகும். இதில் 182 சிறந்த பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இச்சரித்திரங்களிலுள்ள விஷயங்களை ஒவ்வொருவரும் வாசித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இது டிம்மி 8 பாரங்கொண்ட ஸஞ்சிகை வடிவமாய் 12 ஸஞ்சிகையில் முடிவுபெறும். சொற்ப காப்பிகளே அச்சடித்து வருகிறோமாகையால் வேண்டியவர்கள் உடனே எழுதிப்பெற்றுக் கொள்ளவும். 12 ஸஞ்சிகைகளும் முடிந்து ஒரே புஸ்தகமாய் அனுப்பும்பொழுது அதன்விலை வி. பி. சார்ஜ உள்பட ரூபா 4. ஆகையால் இப்பொழுதே ஆர்டர்செய்துகொள்ளுங்கள்

சந்தா விவரம்.

12 ஸஞ்சிகைக்கு முன் பணமாக வி. பி. சார்சு உள்பட ரூ 2--12-0

சந்தாதார்களின் சௌக்கியத்தை உத்தேசித்து இரண்டு தடவையாக வி. பி. யிலனுப்ப சந்தா ரூ 1—7—0

Apply to—மானேஜர், 'பக்தமாலா' ஆபீஸ்,
107, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

156

PRAJNAPARAMITA.

157

ஓம்

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4. } 1913ஞ செப்டம்பர்மீ 15உ
பிரமாதீசஞ ஆவணிமீ 31உ { பகுதி 5.

பிரக்ஞா பாரமிதை.*

"பாரமிதை" என்பதற்குக் கரைப்படத் தாண்டுதல் என்பது பொருள். பிரக்ஞா பாரமிதை என்றால் பிரக்ஞையின் கரையைத் தாண்டுதல், அதாவது பூர்ணம்பெறுதல் என்பதாம். தானம், சீலம், க்ஷமை, வீரியம், தியானம், பிரக்ஞை, உபாயம், தயை, பலம், ஞானம் என தசபாரமிதைகள் உண்டு. இவை ஒருவன் அடையவேண்டிய உயர்ந்த தெய்வ ஸம்பத்துக்கள் என்று பௌத்தர்களின் நூல்களில் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

"தானஞ் சீல மேபொறை தக்க தூய வீரியம்
ஊன மிற்றி யானமே உணர்ச்சி யோடு பாயமும்.
ஆன மில் லருளினை வைத்த லேவலிமையும்
ஞான மீரைம் பாரமிதை நாடுங் காலி வைகளும்"—நீலகேசித்திரட்டு.†

---

* மேற்கண்ட விஷயம் பிரஹ்மஸ்ரீ மஹா மஹோபாத்தியாய ஸ்வாமிநாத ஐயர் அவர்களின் "பௌத்ததர்மம்" என்ற நூலினின்று எடுக்கப்பட்டது.

† பகவத்கீதை 16-ம் அத்தியாயத்தில் 1, 2, 3 சுலோகங்களில் சொல்லியிருக்கும் தெய்வ சம்பத்துக்களுடன் இவைகளை ஒப்புநோக்குக.

இந்த தசபாரமிதைகளை ஸ்திரீகளாக உருவகப்படுத்தலுண்டு. அவ்விதம் பிரக்ஞாபாரமிதை என்பது, ஞான சக்தியாக இத்துடன் வரும் படத்தில் உருவகப் படுத்தியுள்ளது. பௌத்தர்கள் நூலில், அமிதபா என்று சொல்லப்படுமவர் பரமசிவன் என்னப்படும் பொருளேயாம். அமிதபா அல்லது பரமசிவன் என்பவருடன் அபிந்நமான பரா சக்தியே இங்கே, பிரக்ஞாபாரமிதையாம். கேநோபநிஷத்தில் பிரஸ்தாபம் பெறும் உமை என்பாள் இந்த பிரக்ஞா பாரமிதையின் அம்சமாம்.

இந்தப் படம் ஜாவா தீவிலுள்ள தாமிரச் சிலையின் புகைப் படத்தினின்று சித்திரிக்கப்பட்டது. தவிர்க்க வேண்டிய பத்துவகைத் தீவினைகள் அடியில் வருமாறு, மணிமேகலையில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை தச பாபம் எனக் கூறப்படும்.

கொலையே களவே காமத் தீவிழை
உலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும்,
பொய்யே, குறளை கடுஞ்சொற் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்;
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
றுள்ளந் தன்னி லுருப்பன மூன்று மெனப்
பத்துவகையால் *

ப. நா.

---

* பகவத்கீதை 16-ம் அத்தியாயத்தில் 4-ம் சுலோகத்தில் சொல்லியிருக்கும் ஆசுர சம்பத்துக்களுடன் ஒப்புநோக்குக.

மரண பயம் வேண்டாம்.

(118-ம் பக்கத் தொடர்ச்சி.)

19. அவ்வுலகில் அவர்கள் வாழ்வு என்னவிதமாயிருக்கின்றது என்பதைப் பற்றி இப்போது விசாரிப்போம். அவ்வுலக அநுபவத்திற்கும் இவ்வுலக அநுபவத்திற்கும் வெகு வித்யாஸங்களுள்ளன. ஒன்று முக்யமாய்க் கவனிக்க வேண்டியது. இவ்வுலகின் வாழ்வைவிட அவ்வுலகின் வாழ்வு எப்போதும் சந்தோஷகரமா யிருக்கிறது. ஒரு பிராசீந ஸமய சாஸ்திரத்தில் சொல்லி யிருக்கிறபடி "ஸத்கர்மம் செய்தவர்கள் ஈசுவரன் கையாதரவிலிருக்கின்றார்கள். துன்பம் அவர்களை யணுகாது. அறிவிலிகளான இவ்வுலகத்தவர் அவர்கள் இறந்ததாக நினைப்பார்கள், அவர்கள் துக்கத்தில் அழுந்தியதாக மதிப்பார்கள். அவர்களின் வாழ்வு காலம் முடிந்ததென்றே கருதுவார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் சாந்த பதவியி லிருக்கிறார்கள்." மரண சம்பந்தப்பட்ட விஷயமாக பழைய கட்டுக் கதைகளை யெல்லாம் மறக்கவேண்டும். மரண மடைகிறவர்கள் திடீரென ஸ்வர்க்கத்தில் போய்க் குதிக்கின்றார்களில்லை. திடீரென நரகத்தில் தள்ளப்படுகின்றார்களில்லை. உலகத்தார் அபிப்பிராயப்படி உள்ள நரகம் இல்லை, இல்லை. அவனவன் கர்மத்தினாலும் மநச் சேஷ்டையாலும் ஏற்படுத்திக் கொள்ளும் நரகத்தைத்தவிர வேறு நரகம் என்ற ஸ்தாநம் எங்குமில்லை. மரணமானது மனிதன் எனப்படும் ஜீவாத்மாவில் ஒருவிதமான மாற்றத்தையும் உண்டு பண்ணுகிறதில்லை. மரணத்தினால் ஒருவன் உயர்நல மமைந்த ஞாநியாகவாவது, தேவனாகவாவது ஆகிறானில்லை. இறந்த பிற்பாடு எல்லா ஞாநமும் ஒருங்கு சேர்ந்து அவனிடத்தில் அமைகிறதில்லை. இறக்கிறதற்கு முன் ஒருவன் எந்தவிதமான சீலம், எந்தவிதமான ஸ்வபாவம் உள்ளானோ, அதே விதமான சீலம், ஸ்வபாவம் உடையவனாக மரணத்துக்குப் பின்னும் இருக்கிறான். ஆனால் ஒரு வித்யாஸமுண்டு. அதாவது மரணத்திற்குப் பிறகு ஸ்தூல சரீரத்தை விட்டு விலகி இருக்கிறான்.

20. முன் சொன்னதைச் சற்று கவனிக்கவேண்டும். ஸ்தூல சரீரம் நீங்கவே பசி, தாஹம், களைப்பு, துன்பமுறுதல், கஷ்டமான வேலைகள் இவைகளுக் குட்படாமல் ஒருவன் ஸ்வதந்த்ரம் பெறுகிறான். ஜீவதசையில் இப்போதுதான், தான் விரும்பியபடி செயல்

புரிய ஸ்வதந்த்ர முள்ளவனாக ஆகிறான். ஸ்தூல சரீரத்துடன் நடை
பெற்ற இவ்வுலக வாழ்வில் ஸ்வதந்த்ர மில்லாமல் அடிக்கடி நிர்ப்பந்
தத்துக்குள் ளாகிறான். அதனால் இச்சையை நிறைவேற்றத் தடுக்
கப்படுகிறான். உணவு உடை வஸ்திராதிகள் ஸம்பாதிக்க வேலை
செய்ய வேண்டியவனாக இருக்கிறான். தன் குடும்பத்தைக் காப்பா
ற்ற சம்பாதிக்க வேண்டியவனாக இருக்கிறான். ஸங்கீத வித்வான்,
சிற்ப சாஸ்திரி இவர்கள் போன்ற தொழிலாளிகளைத் தவிர ஏனைய
தொழிலாளிகளுக்கு அவர்கள் வேலை பிரியமாகவே யிராது. கட்
டாயத்தின்பேரில் அவர்கள் தொழில் புரிகிறவர்களா யிருக்கிறார்கள்.
உண்மையில் உலகத்தில் நடைபெறும் எந்நன்மையான தொழிலும்
கஷ்டமானதுதான்.

21. புவர் லோகமான அந்த உலகத்தில் பணம் வேண்டாம்.
ஏனென்றால் உணவு வேண்டாம், தங்குமிடம் வேண்டாம். அந்த
லோகத்தில் ஸுஹிருதங்களும் அழகானவஸ்துக்களும் அந்தலோக
த்திலுள்ள எல்லா வஸ்துக்களும் பொதுவாய் எல்லாருக்கும் உரித்
தானவை. அவைகளைக் காசு கொடுத்து வாங்கவேண்டாம், ஸூக்ஷ
மமான பிரகிருதியா லமைந்த லோகம் அது. உள்ளுடம்பாகிய
ஸூக்ஷ்ம சரீரத்தை வைத்துக் கொண்டு ஸ்வேச்சையாய் அங்கு
மிங்கும் அதில் உலாவலாம். ஆகாசமென்ன, நிலமென்ன, மலையெ
ன்ன, கடலென்ன இவைகளில் எந்த அழகான தோற்றத்தைப் பார்
க்க வேண்டுமோ, எந்த ரமணீயமான இடத்திலிருக்கவேண்டுமோ,
இச்சாமாத்திரத்தில் பார்க்கலாம், இருக்கலாம். உயர்ந்த படங்க
ளைப் பார்க்க வேண்டுமானாலும், உயர்ந்த கானங்களைக் கேட்கவேண்
டுமானாலும் இஷ்டப்படி செய்யலாம். இந்த உலகத்தி லிருக்கிற கால
த்தில் யாரேனும் ஒரு விஷயத்தில் அதிகப் பற்றுதலை வைத்துக்
கொண்டிருந்தால் போதுமான மட்டில் அதை அநுபவிக்க தன்
ஸ்தூலசரீரமும் மற்ற சௌகரியங்களுமிடங்கொடா. அந்த உலகத்தி
லோ ஸ்தூல சரீரத்தினுடைய தடையில்லாமல் வேண்டியவாறு
இஷ்டப்படி அநுபவிக்கலாம். சீலமுள்ள நல்ல மனிதர்கள் பூலோ
கத்திலிருந்ததைவிட அந்த லோகத்தில் அதிக ஸந்தோஷத்தை
யநுபவிப்பார்கள். அவர்களுடைய ஸந்தோஷத்திற்கு வரம்பே
யில்லை. எந்தெந்த ஸத் விஷயத்தில் அவருடைய மநம் இவ்வுலகத்

தில் போனதோ அந்தந்த விஷயங்களில் அந்த லோகத்தில் அவருடைய மநம் ஏராளமான அபிவிருத்தியைப் பெறும்.

22. ஆனால் அந்த லோகத்தில் துக்கானுபவ முள்ளவர்கள் இல்லையோ? உண்டு. அந்த லோகவாழ்வு இந்த லோகவாழ்வின் தொடர்பாக, இந்த லோகவாழ்வின் அநுபந்தமாக இருக்கிறது. இந்த ஸ்தூல சரீரத்தில் இவ்வுலகத்திலிருந்தவனே அதை விட்டு அவ்வுலகத்தில் ஸூக்ஷ்ம சரீரத்தை மாத்திரம் அவலம்பித்துக் கொண்டிருக்கிறான். அதனால் இவ்வுலகத்தில் அவனுடைய ஒழுக்கங்களும் அநுபவங்களும் கீழானவைகளாகவும், இழிவானவைகளாகவும் இருந்திருக்குமாகில் அத்தகைய அநுபவங்களை ஸூக்ஷ்ம திரவியங்கள் அமையப்பெற்ற அந்த லோகத்தில் தம் மநம் போனபடி திருப்தியானபடி அநுபவிக்க இயலாது. உதாரணமாக:—ஒரு குடிகாரன் குடிக்கவேண்டும் அவாவினால்வருத்தமுறுவான், ஏனென்றால் குடியால் திருப்தி செய்யக்கூடிய ஸ்தூல சரீரம் அவனிடத்திலில்லை. பெருந்தீனிக்காரன் தின்பண்டம் உண்ணமுடியவில்லையே யென்று வருந்துவான். பேராசையுள்ள லோபியானவன் பணக்குவியல்களைச் சேர்க்க இடமில்லையே யெனத் துக்கிப்பான். பூலோகத்தில் இழிவான ஆசைவசமாகி இழிவான தீய (காமம், கோபம், லோபம், மோகம் முதலிய) எண்ணமுள்ளவர்கள் அவைகளை நுகர்தலுக்கு இடமின்மையால் அவைகள் இல்லையே யென வருந்துவார்கள். சிற்றின்பப் பிரியன் தன்னுடைய சிற்றின்ப ஆசைகளால் துன்பமுற்றுத் துடிப்பான். பொறாமையுள்ளவன் மநமேங்கி முன்னரை (இந்தப் பூலோகத்தின் கண்) விட அதிகமாக மநங் கொதிப்பான். இத்தன்மையானவர்கள் ஸந்தேஹமில்லாமல் அவ்வுலகத்தில் வருந்துவார்கள். எவர்களுடைய ஆசாபாசங்கள் ஸ்தூலமாகவும் இழிவாகவும் கீழ்க் கடையாகவு மிருக்கின்றனவோ அவர்கள் துக்கங்களை அநுபவிப்பார்கள். அந்தந்த ஆசாபாசங்களுக் கேற்ப துக்கங்களின் தாரதம்யம் ஏற்படும். அவர்களுங் கூடத் தங்களுடைய கதியை நலப்படுத்திக் கொள்ளலாம். இந்த ஆசாபாசங்களின் வசமாகாமல் தங்களைச் செய்து கொண்டால் அவைகளாலுண்டாகும் துக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளலாம். அவர்களுடைய தீய கதியை மாற்றிக்கொள்ளலாம். பிறரால் தண்டனை

யென்பது இல்லை. நலமும் தீமையும் அதற்கு முன் உள்ள வினைபைக் காரணமாக உடையன. காரணத்தை விலக்கினால் கார்யமும் பொய்த்துப் போகும். ஆனால் உடனே விலகாது. காரணத்தினுடைய வேகம் போகப் போக அதன் பலனுங் கொஞ்சங்கொஞ்சமாய்ப் போகும்.

23. இத்தன்மையான துர்க்குணங்களையும் துன்மார்க்கங்களையும் அநேகர் தவிர்த்துள்ளாராயினும், உலகப் பற்றுள்ளவர்களாய் சுகமாயும் உல்லாசமாயும் காலங்கடத்துகின்றார்கள். இவர்களுக்கு மரணத்திற்குப் பிறகு, அந்த லோகத்தில், வியக்தமான துக்கானுபவங்களில்லை. ஆனால் அந்த லோகத்தில் இவர்கள் வாழ்வு ருசியில்லாமல் விரசமாக இருக்கும். தங்களைப் போன்றவர்களுடன் சேரலாம். ஆனாலும் அழகான ஆடை, நகை முதலியவைகளில் யாதொரு போட்டியும் அந்த லோகத்தில் இல்லாமையானும், தங்களைவிட மேலாயினோர் வேறு வேறு வேலைகளில் கவனமுள்ளவர்களாயிருக்கின்றமையானும், தங்களை அவர்கள் கோஷ்டியில் சேர்த்துக் கொள்ளமாட்டார்களாகையானும், இவர்கள் வாழ்க்கை மந்தமாயும் அலுப்புள்ளதாயும் நடைபெறும். செய்த கார்யத்தையே செய்தல் விரசமாக இருக்குமன்றோ? இந்த உலகத்தில் தங்களறிவை அபிவிருத்தி செய்து யாதேனும் ஒரு அறிவு பற்றிய வித்தையிலாவது (intellectual pursuit) ஒரு கலைக்ஞானத்திலாவது (artistic interest) பிரிய முள்ளவர்கள் அந்த உலகத்தில், ஸ்தூல சரீரத்தை நீத்தமேல் அந்த வித்தையிலும் அந்த கலைக்ஞானத்திலும் அபிவிருத்தியடைய முயற்சிப்பது மல்லாமல் இவ்வுலகத்திலிருந்ததை விட ஆயிரம்பங்கு அதிக சந்தோஷமாகவுமிருப்பார்கள்.

24. இத்தன்மையர்கள் அந்த உலகத்தில் மிகவும் சந்தோஷமுள்ளவர்களாக இருப்பார்களென்று சொன்னேன். பிறருக்கு உதவிபுரிதலிலும், பரோபகாரம் செய்தலிலும் பிரிய முள்ளவர்கள் அந்த லோகத்தில், மேற்கண்டவர்களை விட இன்னும் எத்தனையோ பங்கு அதிக சந்தோஷமுள்ளவர்களாக இருப்பார்கள். அந்த உலகத்தில், ஏழை, பணக்காரன் என்ற விவஸ்தை இல்லை. பசி, தாகம் என்பவை கிடையா. ஆயினும் துக்கத்தால் வருந்துகிறவர்களும், அந்த லோகத்தின் முன்பின் விஷயங்களையும், அநுபவங்களையும்

அறியாமல் மயங்குகிறவர்களும் அநேகர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் சொல்லியும், அறியாதவர்களுக்கு வழி காட்டியும், உதவி புரிதல் கூடும். இவ்விதமாக பரோபகார சிந்தை யுள்ளவர்கள் அந்த லோகத்தில் தங்களை உபயோகித்துக் கொள்ளுவார்கள். இப்போது மேல் நாட்டில் மரணத்துக்குப் பின்னுள்ள புவர்லோகத்தைப்பற்றிய ஞானம் சூந்யமாக இருக்கின்றது. அதனால் மேல்நாட்டில் இருக்கிறவர்கள், புவர் லோகத்தில் பிரவேசிக்கிறதில், அதன் அநுபவம் தெரியாமல் திகைப்புள்ளவர்களாயிருப்பார்கள். அந்த லோகவிஷயங்களை நன்றாய் அறிந்தவன், அவர்களுக்கு அவைகளைக் கற்பிக்கலாமன்றோ? இந்த லோகம் அந்த லோகம் என்று மொழிதல் நம்முடைய கண் குருடாக இருக்கின்றமையால் என்று அறிக. எப்போதும், அந்த லோகம் என்பது இங்கேயே நம்மைச் சுற்றியே இருக்கிறது. நம்மை விட்டுப் புறம்பாக தூரத்திலில்லை. நாம் அணுகாதபடி வேறிடத்தில் அது இல்லை.

25. இறந்தவர்கள் நம்மைப் பார்க்கிறார்களா? நாம் வசனிக்கும் வார்த்தைகளைக் கேட்கிறார்களா? இக்கேள்விகள் கேட்கப்படுகின்றன. சந்தேகமின்றி, நாம் இருத்தலை நன்றாய் அறிவார்கள். நாம் சந்தோஷமாக இருக்கிறோம், வியசநமாகவிருக்கிறோம் என்பதை நன்றாய் அறிவார்கள். நம்மைக் கண்ணால் பார்க்கிறார்களில்லை. நாம் சொல்லும் வார்த்தைகளைக் கேட்கிறார்களில்லை. நம்முடைய கார்யங்களின் விவரங்களை அவர்கள் அறியார்கள். ஒரு நிமிஷம் யோசித்தால், அவர்கள் பார்வையின் எல்லை தெரியவரும். புவர்லோக வாசிகள் நம்மிடத்திலுள்ள சூக்ஷ்ம சரீரத்தை மாத்திரம் உடையவர்கள். அது ஸ்தூலசரீரத்தின் நிழல் போல அதே மாதிரியானது. ஆனால் நாம் விழித்திருக்கும் போது, நம்முடைய பிரக்ஞை அந்த ஸ்தூல சரீரம் பற்றியே நிகழும். இறந்தவன் பிரக்ஞை உள்ளுடம்பாகிய சூக்ஷ்ம சரீரத்தைப் பற்றியே நிகழும். நம்முடைய சூக்ஷ்மசரீரத்தைப் பற்றித்தான் அவன் அநுபவம் நிகழும். நம்முடைய ஸ்தூல சரீரத்தை அவன் பார்க்கமாட்டான். அதன் சேஷ்டைகளை அறியான். நாம் தூங்கும் காலத்தில், அந்த சூக்ஷ்ம சரீரத்தில் கிரீடிக்கிறோம், நடைபெறுகிறோம். அதனால் நாம் அவனையும் அவன் நம்மையும் பரஸ்பரம் பார்ப்போம். நாம் விழித்தோமா

ன், நாம் அவனைப் பார்க்கமாட்டோம், அவனுக்கு நாம் தூங்குவது போலவே காணப்படுவோம். அவன் நம்மைப் பார்ப்பான் தான். நாம் அவனை அறிகிறோமில்லை. அவனைக் கவனிக்கிறோமில்லை. நம்முடைய பிரக்ஞை சூக்ஷ்ம சரீரத்தை விட்டு, ஸ்தூல சரீரத்தில் இப்போது விழிப்பில் இயங்குகிறது. நமக்கு சமீபமாக இப்போது ஒருவன் தூங்குகிறான். அவன் இருக்கிறதை அறிகிறோம். அவனுடன் சம்பாஷணை ஒன்றும் நாம் செய்ய இயலவில்லை. அவனும் நம்முடன் ஒன்றும் பேசுகிறானில்லை. இவ்விதமே அந்த லோகத்திலுள்ளவர்களுக்கு, நாம் விழிக்கும்போது நாம் தோன்றுவோம். தூங்கும் காலத்தில் நாம் அநுபவிக்கும் விஷயங்களை நம்முடைய விழிப்புக்காலத்தில், ஸ்மரணைக்கு சாதாரணமாகக் கொண்டுவர இயலாமையால், நம்முடைய இறந்தவர்களை இழந்துவிட்டதாக மதிமயங்கி நினைக்கிறோம். அவர்கள் நம்மை இழந்து விட்டதாக நினையார். ஏனென்றால் நம்முடைய சூக்ஷ்மசரீரத்தின் மூலமாக நாமிருப்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

26. இந்த சூக்ஷ்ம சரீரம் என்பது உண்மையில் காம மாநஸிக சரீரம். நம்முடைய காமனைகளும் அவைகளால் உண்டாகும் உணர்ச்சிகளும் தங்கும் சரீரம். அதனால் நம்முடைய காமனைகளையும் ஆசைகளையும், உணர்ச்சிகளையும் இறந்தவர்கள் நன்றாய் அறிவார்கள். நாம் சந்தோஷமாகவிருந்தால், அதை உடனே அவர்கள் தெரிந்து கொள்வார்கள். ஆனால் அந்த சந்தோஷத்தின் காரணத்தை அறிந்துகொள்ள மாட்டார்கள். நாம் துக்கத்தில் மூழ்கினோமாகில், உடனே அதை அறிவார்கள், அவர்களும் வியசனிப்பார்கள். ஏன் அவ்விதம் துக்கிக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியவராது.

இவைகள் எல்லாம் நம்முடைய விழிப்புக் காலத்தில் நிகழ்கின்றவை. தூங்குங் காலத்தில், முன் பூமியிலிருந்தது போலவே, நம்முடன் சம்பாஷணை செய்வார்கள். இங்கே பூலோகத்தில் நம்முடைய எண்ணங்களை மறைப்போம். அந்த லோகத்தில் அது முடியாது. எண்ணங்களை சுலபமாக நேரில் அறியக்கூடிய சக்தி அவர்களுக்குண்டு. நம்முடைய எண்ணங்கள் பெரும்பாலும் ஆசாபாசங்கள் பற்றியவைகளாக இருக்கின்றமையால், அவைகளை ஒளித்தல் முடியாது. ஆனால் காமனைகளில்லாத சுத்தபிரக்ஞை பற்றிய நம்முடைய எண்ணங்கள் அவர்களுக்கு தெரியவரா.

27. மேற்கண்டவைகளுக்கும் பால்யத்தில் நாம் கேட்டிருந்த **சுவர்க்கம், நரகம்** என்றவைகளுக்கும் யாதொரு ஸம்பந்தத்தையும் காணேமே, என்று நீ நினைக்கலாம். இந்த உண்மைகளை ஆதாரமாக வைத்துத்தான் அக்கதைகள் ஏற்பட்டுள்ளன. உண்மையாகவே நரகம் என்பது கிடையாது. ஆயினும் குடிகாரன் தன்னுடைய தீய ஒழுக்கத்தின் பயனுய் மரணத்திற்குப் பின் அநுபவிப்பது நரகம் என்றே சொல்லலாம். பின் அநுபவித்தலுக்குப் போதுமானபடி இப்போதே தங்களுடைய துன்மார்க்கமுறைகளினல், குடிகாரனும் சிற்றின்பப் பிரியனும், காரணங்களை உண்டு பண்ணிக் கொள்ளுகிறார்கள். இவைகளால் ஏற்படும் வாதனைகள், நீடித்து இரா; அவர்களின் காமனைகள் வரவரக் குறைந்து ஒய்ந்து போகும்வரை அவைகள் இருக்கும். அவர்கள் திடமான அறிவுள்ளவர்களாகில், காமனைகளை ஸ்வாதீநப்படுத்தி அவைகள் தங்களை பாதிக்காமல் செய்து கொள்ளலாம். **ரோமன் காதோலிக் கிறிஸ்துவர்களின்** மத ஸம்பிரதாயத்தில், இந்த விஷயத்தைத்தான், பாபவிமோசக ஸ்தாநம் என்பதாக அறிவிக்கிறார்கள். அதாவது மரணத்திற்குப் பிறகு சுவர்க்காநுபவம் பெற யோக்யனுக சொற்பநரக வாதனைகளையாவது அநுபவித்துத் தான், ஒருவன் தன் தீயசுபாவங்களை எறித்துக்கொள்ளுகிறான்.

28. மரணத்திற்குப் பிறகு மேற்கண்ட நிலைமையைத் தவிர, உயர்வான நிலைமை வேறு ஒன்று உண்டு. கீழான காமனைகள் முற்றும் தொலைந்த பிற்பாடு, அந்த உயர்ந்த நிலைமையை அடையலாம். இதுவே சுவர்க்கம். இதில் மதவிஷயங்களில் பரவசமான சந்தோஷமும் (religious ecstasy) பிரக்ஞையின் மலர்ச்சியும் செயலும் (High intellectual activity) அதிகமாய் ஏற்படும். முன் பூமியில் ஒருவன் இம்முறைகளில் எவ்வளவு உழைத்திருக்கிறானே அவ்வளவுக்குத் தகுந்தபடி குறைவாகவும் அதிகமாகவும் இவ்வநுபவங்கள் நிகழும். இந்நிலைமையில் ஒருவன் அநுபவிக்கும் ஆநந்தம் மிகவும் பெருகியது, வரம்பு கடந்தது. பிரபஞ்சவிஷயத்தின் உண்மையை அதிகமாக அறிவான். சத்தியத்தின் எல்லையை (Reality) அதிகமாக சமீபிக்கிறான். இந்த அநுபவம் எல்லா ஜீவர்களுக்கும் உண்டு; இது ஈசுவர பக்தியுள்ளவர்களுக்கு மாத்திரம் உண்டென்று நினைக்க வேண்டாம்.

29. இந்நிலைமையைப்பெறுதல்,வெகுமான (Reward) மன்று. இந்த பூமியில் ஒருவன் ஒழுக்கத்தினால் ஏற்படும் நல்லசீலத்தின் பலனும், ஒருவன் பூமியில் உயர் நலமான சிந்தனை யுடையவனாகவும், பரோபகார எண்ணமுள்ளவனாகவும், ஈசுவர பக்தியுள்ளவனாகவும், இருப்பானாகில், அத்தன்மையான ஒழுக்கத்தின் நேரான பலனாக மரணத்திற்குப்பிறகு இந்த உயர்நலம் அமைந்த நிலைமையை அடைகிறான். இந்நிலைமைகள் எல்லாம் ஜீவயாத்திரையின் பலபடிகளாம். பால்யத்தில் ஒருவன் ஒழுக்கமுறையின்கார்யமாகஒருவன் யௌவந தசையினுடையவும் வார்த்தகதசையினுடையவும் நேர்மையும் நேர்மையின்மையும் ஏற்படுகின்றன. அவ்விதமே, இந்த லோகத்தில் நம்முடைய ஒழுக்கமுறைக்குத் தக்கவாறு மரணத்திற்குப்பின் அந்த லோகத்தின் நம்முடைய கதியின் தன்மை ஏற்படும். ஆநந்தமான இந்நிலைமை நித்தியமானதா? என்று நீ கேட்கலாம். இல்லை. பூமியில் நம்முடைய வாழ்வின்பயனாய் இந்நிலைமை ஏற்படுகிறது என்று நான் சொன்னேன். அநித்தியமான கார்யம் (அதாவது உலகவாழ்வு) நித்தியமான பலனை (நித்யாநந்தத்தை) கொடுக்க இயலாது. மனிதன் ஜீவ யாத்திரை (Life of man) நீ நினைக்கிறபடி சிறியதன்று; மிகவும் நீடித்தது, மிகவும் பெருமையானது. ஈசுவரனென் பெருஞ்சுடரினின்று பொறி போன்று வந்த ஜீவன் அவரிடம் திரும்பவேண்டும். அந்தத் திரும்புதலே பூர்ணம் பெறுதலாம். பூர்ணம் என்ற அந்நிலைமை இன்னும் வெகு தூரத்திலுள்ளது. "வண்ணான் வீட்டுக்கு வழி எங்கே? இன்னும் சற்று தூரம்" என்ற பழமொழியின் உண்மை இதுதான். எல்லா ஜீவர்களும் மேன்மேலும் விகாஸ முறையில் அபிவிருத்தியாகிக் கொண்டு வருகின்றார்கள். இது ஈசுவரனின் தர்ம விதி. மற்ற ஜீவர்களைப்போலவே, மனிதனும் சாவதாநமாய் மெல்ல மெல்ல அபிவிருத்தியாகிக் கொண்டு வருகிறான். பூமியில் மனிதனுடைய ஒரு ஜன்மமானது அவனுடைய உண்மையான ஜீவயாத்திரையின் ஒரு நாளாகும்.

(இன்னும் வரும்.)

ப. நா.

167

கர்மம்.

(126-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆதலால் முமுக்ஷுக்களானவர்கள் முதல் ஆகாமியமாயினும் இரண்டாவது ஆகாமியமாயினும் சரி, ஹுஷாராயிருந்து பாப ஆகாமியத்தைத் தவிர்க்கவேண்டும். மூன்றாவதான ஆகாமியத்தைக் கண்டு பிடிக்க யோகமகிமையின் சாமர்த்தியம் கிடைப்பது அரியது ஆனபடியால் எவ்வகைப்பட்ட ஆகாமியமாயினும் பாப ஆகாமியத்தை நீக்குவதிலேயே தற்பரராயின் அநுகூலமடையலாம். இது எதுபோல் எனில், தனக்குச் சம்மதமில்லாத ஒரு மரம் தனது தோட்டத்தில் உண்டாகுமாயின் அதை முளையிலேயே கிள்ளி யெறிந்து விடுவதிலுள்ள சுலபம்போலும், அதுவும் தவறி கொஞ்சம் நாள் கழிந்தால் கைவாளினால் கொஞ்சம் சிரமத்தின் பேரில் நீக்குவது போலும், அதுவும் நீங்கில் அநேக சாமக்கிரியின் பேரில் அநேக ஆட்களின் உதவியைக்கொண்டு அநேக கஷ்டப்பட்டு வெட்டியெறிவது போலும் என மேற்கண்ட மூன்று விதமான ஆகாமியத்தை நீக்குவதில் யுக்தி என அறிக. இவ்விதம் மூவித ஆகாமிய சொரூபமும் அவற்றின் பாகுபாட்டின் பிரயோஜநமும் கூறப்பட்டன.

சஞ்சித கர்மவிசாரம்.

8. சஞ்சிதம் என்றால் சஞ்சயம் செய்து (சேர்த்து) வைக்கப்பட்ட கர்மம் என்றர்த்தம். ஒரு ஆகாமியம் உண்டாகி பலனுக்கு வரும் மத்தியில் கட்டுப்பட்டு இருந்த அவஸ்தைக்கு அந்த ஆகாமியத்திற்கே சஞ்சிதம் என்று பெயர். ஆதலால் கட்டுப்பட்டிருத்தலே அதன் வடிவம். இலக்கணமாவது :—"கர்த்திருத்துவ சகிதமாய்ச் சென்ற க்ஷணபரியந்தம் செய்து பலனுக்கு வராதிருப்பதான ஒன்றுபோலிராத வாஸநாரூப கர்மங்களின் கூட்டம் சஞ்சிதம்" என கர்மத்தை ஜயித்த பண்டிதர்கள் லக்ஷணம் கூறுவர்.

கர்த்திருத்துவ புத்தியின்றி அநந்த கோடி கர்மங்களைச் செய்யினும் சஞ்சிதம் என்ற கலத்தில் வரமாட்டாது என்பதைக் காட்டவேண்டி "கர்த்திருத்துவ" என்றும், ஒரு கர்மம் செய்யும் போது ஆகாமியம் என்றேற்படுவதால் அதை நீக்க "சென்ற"

என்றும், அப்பேர்ப்பட்ட கர்மம் செய்து வெகுகாலத்திற்குப் பின் சஞ்சிதத்திற்கு வரவில்லை, ஆனல் அடுத்த க்ஷணமே சஞ்சிதம் என்ற நாமதேயத்தை அடைகிறது என்ற குறிப்பிற்காக "க்ஷணம்" என்றும், அப்போது அதின் சொரூபம் என்ன வென்பதைக்காட்ட வேண்டி "பலனுக்கு வராதிருப்பது" என்றும், அவைகள் கீரை விற்ற தாங்யம் போல ஒன்றற்கொன்று தாரதம்மியம் உள்ளவைகள் என்பது தோன்ற "ஒன்று போலிராத" என்றும், ஒரு பதார்த்தக் ஞாநம் உண்டானபின் மறுபடியும் நினைவில் தோன்றுதற்குக் காரணமாக அந்த ஞாநம் அடங்கியிருப்பதுபோல் இங்கும் செய்தல் வடிவ ஆகாமியம் பலனுக்கு வருவதற்கு முன் வெளிப்படையாயில்லாமல் அடங்கியிருக்கிறது எனக் காட்டவேண்டி "வாஸநாரூப" என்றும், அவ்வித கர்மங்கள் அளவிறந்தன என்பதைக் காட்டவேண்டி "கர்மங்களின்" எனப்பன்மையினும், அவ்வித சஞ்சித மூட்டைகள் பலவோ என வரும் சங்கையை நீக்க வெண்ணி "கூட்டம்" என ஒருமையினும் ஆக இவ்விதம் நல்லிலக்கணம் கூறப்பட்டது.

பிராரப்த விசாரம்.

9. பிராரப்தம் என்றால் முன்னமேயே பலனை ஆரம்பம் செய்த என்றர்த்தம். இதின் சொரூபமாவது சுகம் அல்லது துக்கரூபபோக வடிவமேயாம். அதின் இலக்கணம்: சஞ்சித கர்மங்களின் கூட்டத்தில் எது பருவமடைந்து பலனுக்கு வந்திருக்குமோ தற்காலம் போக்திருத்துவ சகித சுகதுக்காநுபவ ரூபமான போகமோ அது பிராரப்தம் என்பர். இவ்வளவு இலக்கணங்களும் வேண்டியன தானே எனில், ஒன்று பலனுக்கு வரும்போது காலாந்தரங்களில் பக்குவமாகக் கூடிய கர்மங்களும் அநேக மிருக்கின்றனவென்பதைக் காட்டவேண்டி "கர்மங்களின் கூட்டத்தில் எது பக்குவமடைந்து பலனுக்குவந்திருக்குமோ தற்காலம்" எனவும், போக்திருத்துவ விர்த்தியின்றி கரணாதிகளில் நிகழக்கூடிய சுக துக்க அநுபவங்கள் பிராரப்தமாகமாட்டா என்பதைக் காட்டவேண்டி "போக்திருத்துவ சகித" என்றும், அவ்வித பிராரப்தத்தின் சொரூபம் எவ்விதமோ என ஐயமுறாமல் "சுக துக்க அநுபவ ரூபமே" எனவும் இவ்விதம் சுத்தவிலக்கணம் கூறப்பட்டது. முன் ஆகாமியம் பிரிக்கப்பட்டது போல் இங்கும் அநேக விதமாய்ப் பிரிக்கப்படலாமாயினும் விரிப்பில் உபயோகமில்லாமை தெரிந்து ஈண்டு விலக்கப்பட்டது.

10. இவ்விதம் இது வரை கர்மத்தின் இலக்கணம் கூறி வந்தது மற்ற சாஸ்திரங்களோடு விரோதப்படுகிறது என சங்கிக்க லாம். அதாவது மற்ற சாஸ்திரங்களில் ஜந்மாந்தரங்களில் செய்தது சஞ்சிதம் என்றும், அப்படியே ஜந்மாந்தரங்களில் செய்து இந்த ஜந்மத்தில் பலனுக்கு வருவது பிராரப்தம் என்றும், இப்போது செய்து இனி வருகிற ஜந்மங்கட்குக் காரணமாயிருப்பது ஆகாமியம் என்றும், இவ்விதம் ஒரு ஜந்மத்தில் செய்து அடுத்த ஜந்மத்தில் பலனுக்கு வருகிறது என்று கூறியிருக்க இங்கே க்ஷணிகங்களைக் கூறியிருப்பதினால் இச்சந்மத்தில் செய்ததும் இச்சந்மத்திலேயே பலனுக்கு வரக்கூடும் என்று தோன்றுகிறதே, அது விரோதமாகுமே எனில் சமாதானம்:— இங்கே, ஒருவன் செய்த கர்மங்கள் எல்லாம் மூன்றுவது க்ஷணத்தில் பலனுக்கு வந்துவிடும் என்று கூறவில்லை. ஆனால் மறுஜந்மத்தில் தான் பலனுக்கு வரக்கூடும் என்பதைக் கண்டித்தும், உண்டான மூன்றுவது க்ஷணமுதல் எவ்வளவு காலம் வரையிலும் பலனுக்கு வரக்கூடும் என்பதும் மட்டும் குறிப்பிடப்பட்டது. ஆயினும் பூர்வ சுருதிகளும் கூட ஜந்மாந்தரத்தில் தான் பலனுக்கு வரும் என்பதில் வற்புறுத்திக் கூறவில்லை. ஆனால் தங்கள் பிரயத்நம் சாமாந்யமாயிருப்பினும் பிரபலமாய்த் தோற்றும் மந்தமதியுடைய மும்முக்ஷுக்களுக்கு இப் பிரஸங்காநுசாரமாய் அதே ஜந்மத்தில் பலனடையப்படாவிடில் சாஸ்திரங்களில் அப்பிரமாண புத்தி வந்து விடும் என்ற நோக்கால் வரும் ஜந்மங்களில் தான் பலன் என்று குறிப்பிட்டன. இங்கே சுருதி யுக்தியாதிகள் எல்லாம் ஒத்திருக்கிறபடியால் தீவிரமாயிருந்தால் மூன்றுவது க்ஷணத்திலேயே பலனுக்கு வந்து விடும் என்று மேற்கண்ட சுருதிகளின் அந்தரங்கதாத்பரியம் எடுத்துக்காட்டப்பட்டது.

பிரமாணங்கள் பின்வருமாறு.

1. "3 வருஷத்திலாவது, 3 மாசத்திலாவது, 3 பக்ஷத்திலாவது, 3 நாளிலாவது (3 நாளிலானாலும் சரியென்றர்த்தம்) புண்ணியமாவது, பாபமாவது அளவுக்கு மிஞ்சினால் (அதாவது முதிர்ந்தால்) அந்த இடத்திலேயே பலனுக்கு வரும்."

2. "மிகமேவிய புண்ணிய பாபமெனும்
வினையின் பயன்மேல் ஒருகால முறாது
இகமே வருமென்பதனல் உளநோய்
எல்லாம் இவனைச்செறவெய் தினவே"—(சுசிவர்ண போதம்)

3. "நிகழ்கால வருங்கால போகங்களைச் சம்பாதித்தற் பொருட்டு இவ் வர்த்தமாந தேகத்தில் எந்தக் கர்மம் உண்டாகிறதோ அத்தன்மைய கர்மம் ஆகாமியம் எனப்படுகிறது"

பாலபோதம் 9-ஆம் உபதேசம்.

4. தனக்குவந்த மரணம் என்னும் ஓர் பிராரப்தத்தை முன்னமேயே தெரிந்த மார்க்கண்டேயர் சிவபூஜையாகிய நூதந ஆகாமியத்தை முன்னடியே விதைத்து தீவிரப்படுத்தி அதே ஜந்மத்தில் அவர் உத்தேசித்தபடி காலனை (மரணத்தை) வென்று பலனையடைந்தார் என்னும் புராண வசநங்களாலும் அறிக.

இனி யுக்தியாவது.

ஒரு கல்பத்துக்கு முன்னுள்ள ஆகாமியம் (செய்தது) இச் சன்மத்தில் பலனுக்கு வாதிருப்பதும், போன ஜந்மத்தில் செய்தது இப்போது பலனுக்கு வருவதும் கர்மங்களின் தீவிரத் தன்மையை முன்னிட்டே எனில், தீவிரத்தன்மையே ஏதுவாய் முடிவதால் தீவிரதரமாயின் (மிகுந்த தீவிசமாயின்) அதே ஜன்மத்தில் ஏன் பலனுக்கு வரமாட்டாது, வந்தே தீரும் என்ற யுக்தியும்.

இதைத்தானே நியாய பூர்வகமாய் எடுத்துக் காட்டப்படுகிறது.

அநுமாநப்பிரமாணம்:—

பிரதிக்ஞை: கிரியாந முதிர்ச்சி பல (பிரயோஜன) ரூபமாம்.

ஏது: கிரியாந தீவிரத்தன்மையால்.

திருஷ்டாந்தம்: எங்கே எங்கே கிரியாந தீவிரத்தன்மை யுண்டோ அங்கே யங்கே பல ரூபத்தன்மை (சொப்பனக் காட்சி போல)

உபநயம்: இதுவும் அப்படியே.

நிகமநம்: ஆகலின் இங்ஙனம் என்ற அநுமாநப்பிரமாண யுக்தியாலும் அறிக.

அவ்விதமே யொருவன் யதார்த்தமாக ஒரு வியவகாரத்தில் தீவிரப் பிரயத்தநம் செய்வானுயின் அடைய முடியாததையும் அடைவதும், அப்படியே பிரயத்தநக் குறைவால் எளிதாக அடையக்கூடியதையும் அடையாமல் இருப்பதையும் முன்சொன்ன யுக்திக்கிணங்க அவரவர்கள் அநுபவத்திலும் கண்டுகொள்க.

ஆகவே எனக்குப் பிராரப்த மில்லையே யென்று வருந்தாமல் மந்தனுயினும் தீவிரனுயினும் அவனவனுடைய பிரயத்தனத்திற் குத் தக்கதாக பலனைப் பெறலாம் என்ற பூர்வ சுருதிகளின் அர்த் தமே இவ்விதம் இங்கு வெளிப்படுத்தப் பட்டது.

ஏது (காரணம்) வர்ணநம்.

11. இவ்வாறு சொரூப விசாரம் செய்யப்பட்டது. இனி ஏது வில் விசாரம் செய்வோமாக. பிராரப்தத்திற்கு ஏது சஞ்சிதமும், சஞ்சிதத்திற்கு ஏது ஆகாமியமும், ஆகாமியத்திற்கு ஏது அவன வன் விவேகாவிவேகமும் என அறிக.

அல்லது மற்றோர் வகையாக பிராரப்தத்திற்கு ஏது, அநாதி யாகிய சஞ்சித கர்மத்திலுள்ள தீவிரப்பட்ட கர்மங்களும், சஞ்சிதத் திற்கு ஏது ஆகாமியமும், ஆகாமியத்திற்கு யேது பிராரப்த கர் மத்தை அநுபவிக்குங்கால் சாந்தியின்மையால் உண்டாகும் அவ னவன் விவேகா விவேகமே எனவும் கொள்க.

அல்லது, புண்ணிய பாபங்களுக்கு ஏது இராகத் துவேஷமும், இராகத்துவேஷ ஏது அநுகூல பிரதிகூல ஞாநமும், அநுகூல பிர திகூல ஞாந ஏது பேதக்ஞாநமும், பேதக் ஞாந ஏது அக்ஞாந மும் ஏதுவாதலை யுணர்க.

எவ்விதமாயினும் விவேகா விவேகமே ஏது வென அறிக.

சம்பந்த விசாரம்:—

12. இனி, மேற்கூறப்பட்டுள்ள மூவகைக்கர்மங்களும் எந்தத் தத்துவத்துடன்சம்பந்தமுடையது என்று பார்க்குங்கால் ஸ்தூலசரீ ரம், இந்திரியங்க (ஞானேந்திரிய-கர்மேந்திரியங்க). ளுடன் கூடுமா எனில், அவைகளின் உதவியின்றியே சொப்பனம் மனோராச்சியம் இவைகளிலும் கர்மம் நிகழ்கின்றது. பிரஹ்மமும் ஆத்மாவும் சொரூபத்தில் பேதமில்லாதது. ஏன் எனில் ஆத்மாவினின்றும் ஆகாயமுண்டாயிற்று என்ற சுருதிப்படி பிரஹ்மமே ஆத்மா, ஆத் மாவே பிரஹ்மம் என்பது பிரஹ்ம நிஷ்டர்களது அநுபவமும் ஆம்.

அப்பேர்ப்பட்ட பிரஹ்மவடிவ ஆத்மாவுக்கும் கர்ம சாதகமான மநத்திற்கும் சம்பந்தம் சொல்லப்படவில்லை. சுருதியும் "எதன்கண் மனது செல்லாது மீளுமோ அதுவே பிரஹ்மம்." எனக் கூறிற்று.

ஆதலால் மனம் மனத்தின் காரியமான கர்மம் இவைகளுக்கு பிரஹ்மம், ஆத்மா இவைகளுடன் சம்பந்தமில்லை.

அப்படியானால் ஜீவனோடாவது சம்பந்தம் சொல்லலாமா வெனில், கர்மத்துக்கு ஜீவனோடு அந்வயம் காணப்படவில்லை. எப்படியெனில், எங்கே எங்கே ஜீவனுண்டு, அங்கேயங்கே கர்மம் உண்டு என, சுருதியில் ஜீவனிருந்தும் கர்மத்துக்கு அந்வயம் காணப்படாததினால் ஜீவனுடனும் சம்பந்தமில்லை. மற்றியாது எனில், அந்தக்கரணத்துடனே தான் சம்பந்தம் உள்ளது என்பதை அடியிற்கண்ட அந்வய (உடன்பாட்டு), வியதிரேக(எதிர்மறை) யுக்தி வற்புறுத்திக் காட்டுகின்றது. அதாவது எங்கே எங்கே அந்தக் கரணமுண்டோ அங்கேயங்கே கர்மமுண்டு, சாக்கிர சொப்பன அநுபவம்போல் என்றும்; எங்கே எங்கே அந்தக் கரணமில்லையோ அங்கேயங்கே கர்மமுமில்லை, சுஷுப்தி யநுபவம் போல் என்றும் அந்வய, வியதிரேக யுக்தியினாலறிக.

இவ்விதம் அந்தக்கரணத்துடன் சம்பந்தம் எந்தக் காலத்தது, கர்மத்தொகுதியின் ஆரம்பம் எது முதல் எனில், அதின் உற்பத்தி கணிக்க முடியாததாயிருப்பதால் அது (கர்மத்தொகுதி) அநாதியென்று சொல்லப்படும். அப்படியே நம் தாயுமான ஸ்வாமிகளும்:—

இன்றோ இருவினைவந் தேறியது நான் என்றோ
அன்றே வினைவந்த தாற்றேன் பராபரமே

எனத் திருவாய்மலர்ந்தருளினர்.

கர்ம நிவிர்த்தியில் விசாரம்.

13. நல்லது இக்கர்மத்தொகுதி வந்தது அநாதியாயிருப்பினும் இருக்க. நூதந ஆகாமியமின்றி சஞ்சித கர்மங்களை யெல்லாம் அநுபவித்துத் தொலைத்து விடுவோம் எனில், மறதிரூப அஞ்ஞாநத்தோடு கூடியிருப்பதால் நூதந கர்ம சம்பாத்தியம் அன்றி எவ் வியவகாரமும் எப்போகமும் கிடையாது. வியவகாரம் போகம் என்பதே சலநரூப கர்மமாயிருக்கும்போது கர்ம சம்பாத்தியமின்றி எப்போகம் தான் கூடும்? அப்படியே பகவான் கீதையிலும்:—

நஹி கஶ்சித்க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் ।
கார்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்குணை: ॥

இதன் பொருள்:—ஒரு காலத்திலும் நிமிஷமாவது ஒருவனும் கர்மம் செய்யாதவனாக இருக்கிறதில்லை. ஏன் என்றால் பராதீநமாயிருக்கிற எல்லாரும் மாயையிலிருந்துண்டான முக்குணங்களால்கர்மத்தைச் செய்யப் பலவந்தம் செய்யப்படுகிறார்கள். (பகவத்கீதை 3-ம் அத்தியாயம் 5-ம் சுலோகம்) அதையநுசரித்தே தாயுமானவரும்:—

பொற் புறுங்கருத் தேயக மாயதிற் பொருந்த
கற்பின் மங்கைய ரெனவிழி கதவுபோற் கவினச்
சொப்ப னத்திலும் சோர்வின்றி யிருந்தநான் சோர்ந்து
நிற்ப தற்கிந்த வினைவந்த வாறென்கொ னிமலா எனவும்

வந்த வரவை மறந்துலகாய் வாழ்ந்துகன்ம
பந்தமுற வுன்னைப் படிப்பிக்கக் கற்றவர்யார்
இந்தமதி யேயுனக்கிங் கென்மதிகே ளென்னுமே
சந்ததநெஞ் சேபரத்திற் சாரின்ப முண்டாமே

எனவும் கூறியுள்ளார்.

அப்பேர்ப்பட்ட கர்மத்தொகுதியோ அளவிறந்தனவாயிருந்து கொண்டிருக்க இதை யாவர் தான் ஜன்மம் எடுத்துக் கழித்துவிடக் கூடும்? அது விஷயமாயும் நம் தாயுமானவர்:—

"கடலெத்தனை மலையெத்தனை யத்தனை கன்மமதற்
குடலெத்தனை யத்தனை கடல்நுண்மண லொக்குமிந்தச்
சடலத்தை நான்விடு முன்னே யுனைவந்து சாரவிருட்
படலத்தை மாற்றப் படாதோ நிறைந்த பராபரமே" என்றார்.

அவதிவர்ணனை.

14. இவ்விதம் அநாதியாய் அளவிடற்கரியதாய் புசித்துத் தொலைக்கமுடியாததாய் அந்தக்கரணத்துடன் சம்பந்தமுடைத்தாய் உள்ள இக்கர்மம் துக்க நிவிர்த்தியில் பிரயத்தநம் செய்துகொண்டிருக்கும் முமுக்ஷுக்களை எதுபரியந்தம் தொடர்ந்து வரும் எனில், ஸம்ஸார தாபத்திலடிபட்ட புருஷன் அதினின்றும் நீங்கவேண்டி நிஷ்காம்ய கர்மம், உபாஸநாதிகளின் மூலமாய் சித்த சுத்தி,

ஏகாக்கிர தன்மைகளைப் பெற்று, பின் சாதநங்களை யடைந்து சற்குரு சேவை செய்து அவன் சந்நிதியில் அவனது கருணையால் வெளிப்படும் மகாவாக்கிய உபதேசாநந்தரம் உண்டாகும் பிரஹ்மாத்ம ஐக்கிய நிச்சயபரியந்தம் இக்கர்மமும் தொடர்ந்துவரும். அதைத் தெளிவாக விளக்கவேண்டி மூவித கர்மங்களின் ஆசிரய (பற்றுக்கோடு) த்தைப்பற்றி விசாரிப்போமாக.

ஆசிரயவிசாரம்.

15. மேற்கூறிய மூவித கர்மங்களில் ஆகாமியமானது, "நான் இன்ன காரியத்தைச் செய்தேன்" என்னும் வடிவினது. இதில் "நான்" என்னும் அர்த்தத்தை விசாரிக்கு மளவில் பாரமார்த்திகத்தில் பிரஹ்ம வடிவ ஆத்மாவினிடத்தும் வியாவஹாரிகத்தில் ஜீவனிடத்தும் அவதிபெறுகிறது. அப்படியே "செய்தேன்" என்பது தொழில்வடிவமாதலால் மநம், வாக்கு, காயங்களிடத்தேயே அவதியைப் பெறுகின்றன. இவ்விதம் "நான்" என்பதும் "செய்தேன்" என்பதும், பிந்ந அதிகரண (வேறு வேறு இட)த்தை உடைத்தாயிருந்தும் சமான தேசத்துத் தோற்றுகிறது. ஆனால் கர்மகாரணமான திரிகரணங்களுக்கு பிரஹ்ம வடிவ ஆத்மா, ஜீவன். இவைகளோடு சம்பந்தமில்லையென்பது முன்னமேயே காட்டப்பட்டிருக்கிறது. அவ்விதம் சம்பந்தமில்லாத இரண்டு பதார்த்தங்களுக்குள் தோற்றும் சம்பந்தம், அல்லது ஒன்றன் சம்பந்தம் மற்றொன்றிலில்லாததாய்த் தோற்றுதல் பிரமை ரூபமானபடியால் "நான் இன்ன காரியத்தைச் சேய்தேன்" என்னும் வடிவினதாய ஆகாமிய கர்மமும் மேற்கண்ட சம்பந்தத்தையே ஆசிரயித்துக் கொண்டிருக்கிறது. அதாவது, ஆகாமிய கர்மமானது பிரமஜதாதாத்மிய சம்பந்தத்தை(மயக்கத்தினால் உண்டான ஒற்றுமை வடிவசம்பந்தம்) ஆசிரயித்துக் கொண்டிருக்கிறது. எப்போது கர்ம காரணமான அகங்காராதிகளையும், ஆத்மாவையும் வேறு பிரித்தறிகிறானோ (பிரஹ்ம வடிவ ஆத்மாவாகமிஞ்சுகிறானோ) அப்போது மேற்கண்ட பிரமஜ தாதாத்மிய சம்பந்தமும் அதை ஆசிரயித் திருந்த ஆகாமிய கர்மமும் நஷ்டமடைகின்றன.

(இன்னும் வரும்.)

இசக்கியாடும் பெருமாள்பிள்ளை.

அஹல்யா சாப விமோசநம்.

(94-ம் பக்கத் தொடர்ச்சி.)

மன்மதனது புஷ்பபாணங்களின் தொழிலை நிலைபெறச் செய்யும் வசந்தகாலம் வந்தது. பூலோகத்தின்கண்ணுள்ள சகல ஜீவராசிகளும் மநமகிழ்ந்து வாழத் தலைப்பட்டன. எங்கும் புஷ்பச் செடிகள் புஷ்பித்து மணங்கமழத்தொடங்கின. தென்றல் வீசத் தொடங்கிற்று, பக்ஷி ஜாலங்கள் அதிக குதூஹலத்துடன் ஆரவாரமிட ஆரம்பித்தன. கோகிலம் தனதினிய குரலால் கானம்செய்ய ஆரம்பித்தது. மயில் அக்கானத்துக்குத் தக்கபடி நர்த்தநம் செய்யத் தலைப்பட்டது. மரங்கொத்திப் பறவை யதற்கநுகுணமாகத் தாளம்போடுவதைப்போல் மரத்தைக் கணக்குடன் கொத்தத் தொடங்கிற்று. வசந்தன் கௌதமருடைய ஆச்ரமத்திற் புகுந்தான். ஏற்கனவே வெகு அழகுவாய்ந்த அவ்வாச்ரமமிப்போது முன்னைவிடப் பதினாயிரம் மடங்கு அதிகமான அழகுடன் விளங்கிற்று. அஹல்யையும் தனதாச்ரமத்துள்ள விருக்ஷங்கள் முதலிய ஜீவராசிகள் சந்தோஷப்படுவதைப் பார்த்து தானு மதிக ஆநந்தங்கொண்டாள்.

ஒருநாள் எந்நாளுமில்லாத வழகு கௌதமாச்ரமத்தில் வியாபித்தது. எல்லோரும் பார்த்து ஆச்சரியப்படும் வண்ணம் புஷ்பங்கள் மலர்ந்து மணம் வீசுகின்றது. தபஸ்விகளின் மநத்தைக்கூட கலக்கத்தக்க தென்றலன்று வீசுகின்றது. மன்மதனுமதுவுமொன்று சேர்ந்து அவ்வாச்ரமத்தில் விளையாடுவதுபோல் தோன்றினது. மாலை மூன்றுமணி சுமாரிருக்கும். கௌதமமுனிவரும் தனதாச்ரமம் விட்டு வெளியே சென்றார். அஹல்யையுமத் தபோவநத்தின் அழகை அநுபவிக்க ஆவல் கொண்டவளாய் தன் விடுதியை விட்டு வெளிவந்து உலாவிக்கொண்டு நின்றாள். அத் தபோவந மதிக விஸ்தீர்ணமுள்ளது. கௌதமமுனிவர் வசிக்கும் பர்ணசாலைக்குக் கொஞ்சதூரத்தில் வெகு ரமணீயமான ஒரு தாமரைத் தடாகமுண்டு. நாலு பக்கங்களிலு மற்புதமாய் வளர்ந்தோங்கும் விருக்ஷங்களாற் சூழப்பட்டிருந்தது. அவ்வாச்ரமத்திலிதற்குச் சமானமான வழகு வாய்ந்துள்ள ஸ்தலம் வேறு கிடையாது. தேவேந்திரன் தனது காரியம் சித்தியாவதற் கிதுவே தகுதியான இட

மென்று நினைத்து, சகலரும் கண்டு மோஹிக்கத்தக்க அதிக சுந்தரமான ரூபத்தைத் தரித்து அத் தடாகத்தின் கரையை நாடி அங்குள்ள ஒரு விருக்ஷத்தின் கீழமர்ந்தான். அஹல்யையு மங்குமிங்கு முலாவிக் கடைசியி லத்தடாகத்தண்டை வந்துசேர்ந்தாள், இரவில் பிரிந்திருந்து பகலிற் சுகிக்கும் சக்ரவாகப் பக்ஷிகளையும், மரத்தின் மீது கூடுகட்டி அங்கே தனது பத்னி குஞ்சுகளிவைகளுடன் கொஞ்சிவிளையாடும் பறவைக் கூட்டங்களையும், இன்னு மங்கங்கே துள்ளிக் குதித்தினித்துக் களித்திடும் மான் கூட்டங்களையும் கண்ணுற்றாள். அத்தருணத்தில் தன்னை யறியாமலே தன் மநத்திற்குள் ஒருதளர்ச்சி யேற்பட்டதைக் கண்ட அஹல்யை ப்ரமித்து நிற்குங்கால், இதுவே சரியான சமயமென்றெண்ணி தேவேந்திர னவள்முன் நின்றான். அவனைக் கண்டதுமென்னசெய்கிறதென் றறியாமல் தத்தளிக்கு மஹல்யையின் பாதங்களில் வீழ்ந்து இந்திரன், "அஹல்யே! உனது விவாக காலத்திலுன்னைக் கண்ணுற்றதுமுதல் உனதுரூப மென் மநத்தைவிட் டகலவேயில்லை. என்மீது கருணைகூர்ந்திடல்வேண்டும்," என்று பிரார்த்திக்க, அஹல்யை "சக்ர! இஃதுனக்கு நியாயமா, தர்மமா, நீ யிவ்விதம் செய்யத் துணியலாகுமா, என்னை யாரென்று நினைத்தாய்? பாபி, என்னைப்பார்த்து என்னவார்த்தை பிதற்றினுய்! என் முன் நில்லாதே, போ," என்று கடுகடுப்புடன் சொல்லிவிட்டு, திடீரென்று திரும்பி தன் விடுதிவந்து சேர்ந்தாள். புரந்தரனும், "சரி, இவ்வார்த்தைகள் நுனிநாக்கினின்று வந்தவைகளே; இவள் மந மிளகிவிட்டது; இனி என் காரியம் கைகூடு மென்பதிற் சையமில்லை." என்று தீர்மானித்துத் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

அன்றையத்தினமிரவு ஒருமணி சுமாருக்கு கௌதமராதாச்ரமத்தண்டையி லொரு குக்குடபக்ஷி கரைந்தது. அதைக்கேட்ட முனிவர் "ஓஹோ, குக்குடம் கரைகின்றது. நாலாவது ஜாமம் வந்துவிட்டது. ஸ்நாநத்திற்குப் புறப்படவேண்டும். ஒருகாலும் நானிவ்வளவு நேரம் தூங்கினதில்லையே, இன்று நெடுநேரந்தூங்கிவிட்டேனே" என்று நினைத்து ஸ்நாநத்திற்கு வேண்டிய ஸாமக்கிரிகளை யெடுத்துக்கொண்டு கங்கையை நாடிச் சென்றார். அஹல்யையு மெழுந்தாள். குக்குடத்தின் குரலைக் கேட்டாள்-

அது குக்குடமல்ல இந்திரன்தானென்று அவள் மநத்திற் தோன்றிற்று. தோன்றிப் பயனென்ன? கௌதமர் புறப்பட்டு வெளியே சென்றதும் குக்குட ரூபந்தரித்து வந்த தேவராஜன் ஆச்ரமத்திற்குள் புகுந்தான்.

"த்யாயதோவிஷயாநுபஸம்ஸஃ
ஸங்கஸ்தேஷூபஜாயதே।
ஸங்காத்ஸஞ்ஜாயதேகாமஃ"

என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் மொழிந்தது அஹல்யையின் விஷயத்தில் உண்மையாகவே முடிந்தது. சாயங்காலம் தடாகத் தண்டை இந்திரனைக்கண்டது முதல் அவனது உருவமிவள் ஞாபகத்திற் கடிக்கடிவர, அதிலிவளுக்குப் பற்றுதலுண்டாயிற்று. அப்பற்றுதல் அன்றிரவு இந்திரன் வந்தழைக்கும் முன்னரே காமமாய் விட்டது. அதனால் தன்னுடைய உந்நத ஸ்திதியிலிருந்து நழுவலாயினாள். முனிபுங்கவரான கௌதமர் கங்கை வந்து சேர்ந்தார். அதன் ஜலத்தை ஸ்பர்சித்த காலத்தில் கங்கை நித்திரை கலையவில்லை யென்பதை யுணர்ந்தார். "கங்கையாவது தூங்கவாவது எல்லாம் பிதற்றுதல்" என்று நாஸ்திகவாத பிரகிருதி சாஸ்திரத்தின் வலையிலீடுபட்ட நமது சிறுவர்கள் சொல்லக்கூடும். அது சகஜம்தான். அதிலாச்சரியப்படத்தக்க தொன்றுமில்லை. நமது பள்ளிக்கூடங்களி லிக்காலத்திற் சிறுவர்களுக்கு ஊட்டப்படும் வித்தை யத்தன்மையது. நம் சிறுவர்கள் படிக்கும் ப்ரகிருதி சாஸ்திரத்தினால் (Science) பகவான் ஒருவரிருக்கிறாரோ இல்லையோ என்பதே சந்தேகத்துக் காஸ்பதமான விஷயமாகிறது. இன்னும் சில சந்தர்ப்பங்களில் "பகவானொருவரிருப்பதாக ஏற்றுக் கொண்டால் நமது மனிதத் தன்மைக்கு குறைவுதான்" என்று நமது சிறுவர்கள் நினைக்கும்படியாகவும் நேரிடுகிறது. அப்படியிருக்க "கங்கை தூங்குகிறாள்" என்பதைக் குறித்து ஹேளநம் செய்யமாட்டார்களோ நமது சிறுவர்களில் சிலர்? ஆனாலித்தன்மையான விஷயங்களின் உண்மையை நன்கெடுத் துரைக்கத் தக்க பண்டிதர்கள் நம்மவருளில்லை போலும்; நமது சாஸ்திரிகள் சாஸ்திரங்களை நன்றாய்ப் பாடம்பண்ணி நாக்கால் வெளியிடுகிறார்களே யல்லாது, அச்சாஸ்திரங்களிலுள்ள தத்வங்களைக் கிரஹித்து அவைகளை யநுபவத்திற்குக்

கொண்டுவந்து அவ்வநுபவங்களைப் பிறர்க் கெடுத்துரைப்ப தென்பது இக்காலத்தில் வெகு துர்லபமாயிருக்கிறது. ஆகையாலிக் காலத்துச் சிறுவர்களேதாவது கேள்விகள் கேட்டாலச் சாஸ்திரிகள் பதிலுரைக்க மாட்டாமல் இருப்பது மன்றி கேட்கும் சிறுவர்களை நாஸ்திகர் என்றும், மிலேச்சர்க ளென்றும் நிந்தித்து நிராகரிக்கிறார்கள். அங்ஙனமிருக்க பச்சிமதேசத்தார்களுள் யாராவது மேற்சொன்ன வித்யார்த்திகளான சிறுவர்கள் கேட்கும் பிரச்நங்களுக்குத் தகுந்தபடி பதிலுரைத்து தத்வங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெளிப்படுத்துவார்களானால், அவர்களிடத்தில் நமது சாஸ்திரிகளுக்குப் பொறாமை யேற்படுவது சகஜமாக இருக்கிறது. இது பிரஹ்மஞ்ஞாநசங்கத்தின் சரித்திரத்தைச் சற்றுக் கவனித்துப் பார்த்தால் வெளியாகும்.

இது நிற்க, கங்கை தூங்குகிறாள் என்பதினுண்மை யென்னவென்பதைச் சற்றாராய்ந்து பார்ப்போம். விருக்ஷங்கள் வீடுகள், மலைகள், நதிகள் முதலியவைகளுக்கு தேவதைகள் (Nature Spirits) உண்டென்று நமது சாஸ்திரங்க ளொப்புக் கொள்கின்றன. பச்சிம தேசங்களிலுமித் தேவதைகளுண் டென்று மவைகளைப் பார்த்த மனிதர்களுண் டென்றும் அநேக கதைகள் நிகழ்கின்றன. இத் தேவதைகளின் ஸ்வபாவங்கள், தொழில்களெல்லாம் கௌதமரைப் போலுள்ள யோகிகளுக்கு நன்றாகத் தெரியும். எந்தெந்தக் காலங்களிலென் னென்ன விதமாக இத்தேவதைகள் வேலை செய்யு மென்பதை நன்றாய்ப் பரிசோதித் தறிந்த கௌதம முனிவர், கங்காநதியின் தேவதை ராத்திரி நாலாவது ஜாமத்திலென்ன செய்யும், மூன்றாவது ஜாமத்திலென்னசெய்யுமென்பதை யறிந்தவராகையால், அந்நதியின்ஜலத்தை தொட்ட மாத்திரத்தில் நாலாவது ஜாமம் வரவில்லை யென்பதையுணர்ந்தார். மேலும் கங்காநதியினுற்பத்தி ஸ்தாநமாகிய ஹிமாசலத்தின் அடிவாரத்திலநேக யோகிகள் என்றும் தபஸ்செய்துகொண்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஹிமாலயத்தைப் பரிசோதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனங்கு சென்ற ஸ்வின் ஹெடின் (Sven Hedin) முதலிய அநேகர்களிடமிருந்து, கங்காநதியினுற்பத்தி ஸ்தலத்தில் மாநஸரஸ் எனப்படுமேரேரியிருப்பதாகவும், அதன் பக்கத்திலநேகம் யோகிக் கூட்டங்கள் தவம் புரிந்துகொண்டிருப்பதாகவும், அவர்கள் வசிக்குமாச்சிரமங்கள் நமது இதிஹாஸ புராணங்களில் கூறியவண்ணமிருப்பதாகவும், அவ்வாச்

சிரமங்களிற் பிரவேசித்தால் நாமறியாது நமது மநத்திற் கொருவித சாந்தி ஏற்படுகிறதாகவும் தெரிய வருகிறது. அந்த யோகிகள் இரவு நாலாவது யாமத்தில் தியாநம் செய்ய ஆரம்பிப்பார்கள். அவ்வித தியாநத்திலிருந்து புறப்படும் மின் சாரத்துக் கொப்பான ஒருவித சக்தி (Electro-magnetic force) கங்கா நதியின் ஜலத்தில் தாக்கும். அதே க்ஷணத்தில் நதி முழுவதும் பரவும். இவ்விதம் பரவத் தக்க சக்தியதற்குண்டு. நதியின் ஜலத்தைத் தொட்ட மாத்திரத்திலிச்சக்தி பரவியிருக்கிறதா இல்லையா என்பதை யுணரும் சக்தியுடையவர் கௌதம முனிவர். அவர் கங்கையை வந்தடைந்து ஜலத்தைத் தொட்ட மாத்திரத்தில் இன்னும் நாலாவது யாமம் வரவில்லை யென்பதை யறிந்து கொண்டார். "நாலாவது யாமம் வருவதற்குமுன் குக்குடம் கரைகிற வழக்கம் கிடையாதே! இதென்ன விபரீதம், இதற்குக் காரணம் யாதிருக்கக் கூடும், பார்ப்போம்" என்று அதீந்திரிய திருஷ்டியைக் கொண்டு பார்க்குங்கால் தன தாச்ரமத்தில் நடைபெற்ற விஷயங்கள் யாவும் அவரது போதத்திற்கு வந்தன. "ஆஹா, இதென்ன ஆச்சரியம்? அஹல்யைகூடத் தவறினாளா? இப்படிப்பட்ட ஜீவனுக்கு இந்தக் குறையிருந்ததா? அது போகட்டும். என்னாதீநத்தின் கீழிருக்கும் அஹல்யையைப் பரீக்ஷிக்க தேவேந்திரனுக்கதிகார மேது? அப்படி யேதாவது பரீக்ஷைகள் போட வேண்டு மென்றால் என்னநுமதியைப் பெற்றுக் கொண்டல்லவோ போடவேண்டும்? இவனடிக்கடி இவ்விதத் தவறு செய்கிறான். இனி இவ்விதத் தவறுகள் செய்யாதிருக்கும் வண்ணமிவனுக் கேதாவதோர் சாபம் கொடுக்க வேண்டும்" என்றாலோசனை செய்து கொண்டு தன தாச்ரமம் வந்து சேர்ந்தார். கதவைத் தட்டினார். கௌதம முனிவர் வந்ததை யறிந்தவுடனிந்திரன் அஹல்யை யிருவரும் நடுநடுங்கிக்கொண்டு கதவைத் திறந்து தலைகுனிந்த வண்ணம் நின்றார்கள். கௌதம ரிந்திரனை நோக்கி, "அடே, அமரேசா, திரிலோகாதிகாரியாய் விளங்கும் நீ யொரு காரியம் செய்வதென்றால் முன்பின் செவ்வையாக யோசித்துப்பார்த்துச் செய்ய வேண்டுமல்லவா? ஒருவருடைய ஆதரவின் கீழி

---

* Vide article on "Talisman" by C. W. L. in the Theosophist No 32, Part i Page 434.

ருந்து அவரிடமுபதேசங்கள் பெற்று மேல் நோக்கிச் செல்லு மொரு ஜீவனுக்குப் பரீக்ஷைகள் போடுவதற்கு முன்னவருடைய உத்தரவைப் பெறவேண்டும். நீயாகவே யப்படிச்செய்வது சரியன்று. மேலுமிப்போது நீ செய்த காரியத்தி னுண்மையை பாமரஜனங்களறியார்கள். நீ பரீக்ஷை போட்டதாக அவர்களெண்ண மாட்டார்கள். காமாதுரனாக நீயிக்காரியத்திற் பிரவேசித்ததாகத் தானவர்கள் நினைப்பார்கள். உன்னைப் பற்றியவர்க ளவ்விதம் நினைப்பது அவர்களுக்குக் கெடுதலையே விளைவிக்கும். அதற்குக் காரணபூதமாக நீயாவது உனக்குத் தகுதியல்ல. ஆகையால் நான் கொடுக்கும் சாபத்தை பெற்றுக்கொள்" என்று சொல்லிச் சாபமிட்டார். இந்திரனும் தன்னுலகடைந்து கௌதமரிட்ட சாபம் மாறும்படி யநேக ஏற்பாடுகளைச் செய்து வந்தான்.

இந்திரன் சென்றதும் நகசிகை பரியந்தம் நடுங்கி நிற்கும் அஹல்யையை கௌதமர் கண்ணோக்கி "அஹல்யே! நீயும் தவறினையா?" என்று பரிதாபத்துடன் கேட்டார். தான் செய்ததின் நிமித்தம் தன்பதி தன்மீதடங்காக் கோபம் கொள்வாரென்று பயந்து கொண்டிருந்த அஹல்யை யவரதிக பரிதாபத்துடன் பேசினதைக் கேள்வியுற்றதும் லஜ்ஜை யதிகரித்து மநம் பொறுக்கமாட்டாமல் கௌதமருடைய பாதங்களில் வீழ்ந்து கதறலாயினள். "ஐயோ, என்னால் பொறுக்க முடியவில்லையே, என்னைப்போல் கெட்ட ஜீவன்களு மிவ்வுலகிலிருப்பார்களோ? உங்கள் முகத்தில் நானெப்படி விழிப்பேன். பரமபாதகி யாய்விட்டேனே! பாபத்துக்கெல்லாம் நிதியாய் விட்டேனே! பகுத்தறிவற்ற மிருகாதிகளு மித்தகைய குரூர காரியம் செய்யத்துணியாவே! பிரஹ்ம புத்திரியாய்ப் பிறந்து மிப்படி யழிந்துபோனேனே. இந்த ஜகத்தின்கண் ஸ்திரீ ஜாதியின் கௌரவத்தையே குலைத்துத் தொலைத்துவிட்டேனே. இதற்கோ என் பிதா எனக்கிந்தப் பெண் ஜந்மம் கொடுத்தார். சாதாரணமாக ஒரு ஜீவனுக் கேற்பட்டுள்ள பற்பல ஆசைகளை யநேக ஜந்மங்களையெடுத் தனுபவித்தடக்க வேண்டுமென்பதைநானறிந்தும், அப்படியே பல ஜந்மங்களி லுழைத்து மிப்போது இந்த ஆசைக்குக் கீழ்ப்பட்டுக் கெட்டுப்போனேனே. நானிவ்வளவு ஜந்மங்களெடுத் துழைத்ததின் பயனென்ன? இவ்வற்ப ஆசையை வேரோ

டருக்காமற்போனேனே. இனி நானுங்களோடிருந் துங்களுக்கு சுச்ரூஷை செய்வதற்குக்கூட யோக்யதை யில்லாமற் போய்விட்டேனே! என் ஜன்மம் வீண் ஜன்மமாயிற்றே. தங்களைப் பதியாயடைந்தபிறகுகூட நான் தவறினேனே. தங்களா லெனக் காகக் கூடாததேதாவது ஜகத்திலுண்டோ? ஒன்றுமில்லை யென்பதெனக்கு நன்றாய்த் தெரிந்து மிப்படிக் கெட்டழிந்தேனே! இவ்வுலகி லிருப்பவை எல்லாம் அநித்தியம், அவைகளில் நம்மநத்தைப் பற்றவிடலாகா தென்றுணர்ந்து அவைகளைத் தியாகம் செய்திருந்தேனே. இப்போ தென் புத்திதான் போய்விட்டதே. எவ்வளவு தடவைகளில் தாங்கள் "இந்த ஜகத்தில் நாம் சுகமென்று நினைப்பதனைத்தும் கடைசியில் துக்கத்தை விளைவிக்கும். நித்யமான சுகம் ஜகதீச்வரனிடத்தில்தா னிருக்கிறது." என்றுரைத்திருக்கிறீர்கள். நானுமதை யநுபவித்திருக்கிறேனே. சற்று முன்பு அதை யெல்லாம் மறக்கலானேனே. இப்போ தெனக்கது துக்கமே யொழிய சுகமல்ல என்று நன்றாகத் தெரியவருகிறது. பொறுக்கமுடியாததுக்கத்தை யநுபவிக்கிறேன். நான் செய்ததை நினைக்க நினைக்க என் மநம் தயங்குகின்றது. தங்களுடைய பத்நியான நானெப்போதும் பிரஹ்மத்தைத்தியானிப்பதை விட்டு இவ்விதம் கெட்டுப்போவதென்றா லென் மநம் பொறுக்கவில்லையே. பர்ம துரோகி யாய்விட்டேனே. இதைவிட வேறுகொடிய பாபமொருவரால் செய்யமுடியுமோ? தங்களுடைய பத்தினியாயிருப்பதால் எனக்கு யோகமார்க்கத்தி லதிசீக்கிரமாக முன்னுக்கு வரும்படியான பாக்யம் நேர்ந்திருக்கிறதென்பதை யறிந்தும் நான் துரோகியானேனே. நான் என்னையே நொந்துகொள்ளக் கடவேன். ஐயோ! நானிதற்கோ பிரஹ்மாவின் புத்திரியாய்ப் பிறந்து தங்களுடைய பிரஹ்ம சர்யத்தையும் குலைத்தேன். நான் செய்திருக்கிற குற்றத்திற் கென்ன சிக்ஷை செய்தாலும் போதாது, எவ்வித தண்டனை விதித்தாலு மதிகமாகாது. தாங்க ளெனக் கெவ்வித வழியிட்டாலும் சரி, எத்தகைய தண்டனை விதித்தாலும் சரி, அதன்படிநடக்கச் சித்தமாயிருக்கிறேன். இனி இந்தக் குற்றம் செய்யமாட்டேன். நான் செய்ததை நினைத்து என் மநம் பதைப்பது போதும். இவ்வித மினி நான் தவறேன், அது உண்மை. தாங்களே ஏதாவதொரு வழியைத் தேடவேண்டும். நீங்க ளென்னைக் கைவிடலாகாது. உங்களையே நான் தஞ்சமென்றடைந்தேன். தங்களைத்தவிர வேறு யாரா

லெனக்கு நல்வழி யேற்படக்கூடும்? யாரால் நற்கதி கைகூடும்?'' என்று பிரலாபித்தாள். கௌதமமுனிவரும் மநமிளகி,“அஹல்யே! எனக் குன்மீது கோபமில்லை, பரிதாபந்தான். உனக்குத் தகாத காரியத்தை நீ செய்துவிட்டாயான திநாலினியென்னோடிருக்க உனக் கர்ஹதையில்லை. இக்கெடுத லுன்னைவிட்டு நீங்கி நீ முன்னுக்கு வருவதற் கிரண்டு மார்க்கங்களுண்டு. ஒன்று சுலபமானது, மற்றொன்று வெகு கடினமானது. எப்படியு மெந்த ஆசையால் நீ கெட்டுப்போனாயோ அவ்வாசையை நீ கட்டாயமடக்கியாள வேண்டும். அநேக ஜன்மங்களை யெடுத்திவ்வாசையை மறுபடியும் மறுபடியு மநுபவித்துக் கடைசியி லலுத்துப்போயிதனையொழிக்கலாம். ஆனால் அதற்கெத்தனை ஜன்மங்கள்தானாகுமென்று கணக்கிடமுடியாது. இது கஷ்ட மில்லாத வழி. மற்ற வழி வெகு கடிநமானது. ஒவ்வொரு க்ஷணத்திலும் நீ தாங்கமுடியாத துன்பத்தை யநுபவிக்கவேண்டி வரும். ஆனாலதைய நுபவித்துப் பொறுத்து வந்தாயானாலுனக்குநந்தபதவியேற்படும். எந்த மார்க்கத்தை யிச்சிக்கிறாய்'' என்றார். அஹல்யை “எனக்கு சுகமான வழி வேறுவேண்டுமா,இன்னுமிவ்வாசையை யநுபவிக்க வேண்டுமா. இப்போதநுபவித்து நான் துடித்துத் தடுமாறுகிறது போதாதா? கொஞ்ச காலம் கஷ்டப்படுவது பெரிதல்ல. எனக்குச் சுருக்கமான மார்க்கத்தைக் கூறவேண்டும் ஐயனே'' என, கௌதமர், “சரீ நீ கல்லுக்குச் சமானமாகும்படிக்கொரு சாபத்தைக் கொடுக்கிறேன். ஆனாலவ்விதம் கல்லா யிருப்பினுமுனக்குள் அறிவிருக்கும்.

நீ செய்த அகிருத்யமு மதற்குக் காரண பூதமான ஆசையு முன்னையளவில்லாத் துன்பத்துக்குள்ளாக்கிக் கொண்டே யிருக்கும். உனது நிலைமையைக் குறித்து யோசிக்கும்போ தெல்லா முன் மநம் பதறும். அக்கஷ்டத்தினாலேயே உன்னிடமுள்ள தோஷம் நீங்கும். அக்கினியிலிடப்பட்ட பொன்னின் மேனி உயர்நல மடைகிற தல்லவா? மேலும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி தசமுகன் ஸம்ஹாரத்தின் பொருட்டு நீல்மேகச்யாமளவர்ணனாகவும், ஆஜாநுபாகுவாகவும், கோதண்டபாணியாகவும், மஹா சுத்தவீரனாகவும், ஏகபத்நீ விரதமே யுருவமடைந்தது போலுள்ள ஸ்ரீராமசந்திரனாகவு மவதாரம் செய்யப் போகிறார்''

(இன்னும்வரும்.)

R. ஸ்ரீநிவாஸ ஐயர் M. A.

(183

துகாராம் பாவாவின் சரித்திரம்.

(108-ம் பக்கத் தொடர்ச்சி.)

கவநம் செய்தல்.

கீர்த்தனைகளைப் பாடுவதில் துகாராமருக்கு இருந்த பிரியால் பாடகர்களின் பின்னால் நின்று அவர் வெகு சந்தோஷமாய்ப் பாடுவார் என்று முன்னமே சொன்னோம். ஹரிதாஸருக்குப் பின்னால் நின்றாலோ பாட்டு வெகு அழகாய் அமையும். இப்படிச் செய்யச் செய்ய கீர்த்தனைகளை தாமேகவநஞ் செய்யவேண்டுமென்ற இச்சை துகாராமருக்கு ஜநித்தது. நாமதேவருடைய கீர்த்தனைகளைக் கேட்டுக்கேட்டு அவருக்கு நெட்டுருவாயிருந்தது. கீர்த்தனைகளைச் செய்ய வேண்டுமென்ற இச்சை உண்டானது முதல் அநேக புஸ்தகங்களை வாங்கி இரவும் பகலும் அவைகளிலேயே காலஞ்செலுத்தினர். ஆத்தியாத்மிக விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவர் எந்த எந்த கிரந்தத்தைச் சேகரித்தாரெனின்: (1) ஞாநேசுவரி. (2) பாகவதம் பதினோராவது ஸ்கந்தத்தின் பேரில் ஏகநாதசுவாமி அவர்கள் செய்த வியாக்கியாநம். (3) பாவார்த்த இராமாயணம். (4) யோகவாஸிஷ்டம். (5) அமிருதாநுபவம் முதலியவை. இவைகளில் சொல்லிய விஷயங்களைச் செவ்வையாய்த் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஒரு கற்பாறையின்பேரில் தனிமையாகப் போய் உட்கார்ந்து, சித்தத்தை ஏகாக்கிரப்படுத்தி, ஒவ்வொருவிஷயத்தையும் செவ்வையாகப் பார்த்து மநநம் செய்வார். அப்படியே பாகவதம் இராமாயணம் முதலிய புராணங்களை வெகு சிரத்தையுடன் சிரவணம் செய்வார். ஸ்வபாவமாகவே வெகு புத்திமானாயிருந்த துகாராம் இந்த மாதிரியாக சிரவணமநநங்களைச் செய்தவுடன் வெகு கெட்டிக்காரராய் விட்டார். ஞாபக சக்தியோ அதிதீக்ஷ்ணமாயிருந்தது. இப்படி ஏற்பட்ட பின் மெல்ல மெல்ல தன் கோயிலில் கீர்த்தனைகளைச் செய்ய ஆரம்பித்தார். மஹாராஷ்ட்ர தேசங்களில் மகா பெரிய கீர்த்தனைக்காரர் என்று பெயர் வாங்கினர். முன் அவர் சுவாமியின் பஜனை, பிரார்த்தனை, ஸ்மரணம் முதலியவைகளைச் செய்து கொண்டிருந்தார். இப்போது ஆத்மாநாத்ம விசாரணையிலேயே மனஸ் போகத்தொடங்கிற்று. இந்த விசாரணையை பர்வதத்தின் மேற்போய்

நாழிகை மேல் நாழிகையாக உட்கார்ந்து செய்வார். இதனால்அவலா பாயி அம்மாளுக்கு வெகு கஷ்டம் சம்பவித்து, அவர் சாப்பிட வீட்டிற்கு வராத சமயத்தி லெல்லாம் அந்த அம்மாள் அந்நத்தை யும் ஜலத்தையும் அவர் இருக்கும் இடத்திற்குக் கொண்டு போய்க் கொடுப்பாள். கீர்த்தனை செய்வதற்காக அவர் மலை மேற் போய் உட்கார ஆரம்பித்தது முதல் வெய்யிலில் அந்த அம்மாள் அங்கு போகும்படி நேரிட்டது. ஒரு நாள் நல்ல வெயிலில் போய்க் கொண்டிருக்கையில் ஒரு பெரிய முள் தைத்து, அவள் மூர்ச்சை அடைந்து, கீழே விழுந்து, ஜலமெல்லாம் கீழே கொட்டிப் போய் இந்த அவஸ்தையில் இருக்கும் போது எவனோ ஒருவன் அவளைக் கண்டு முகத்தில் ஜலம் தெளித்து அவளுக்குக் கொஞ்சம் பிரக்ஞை வரும்படி செய்தான். பிறகு ஆகாரத்தையும் காலியான பாத்திரத் தையும் எடுத்துக் கொண்டு பர்த்தாவிடம் போய் நடந்த சங்கதிகளை ச்சொல்லி, நீரும் கஷ்டப்படுகிறீர், மற்றவர்களையும் கஷ்டப்படுத்து கிறீர் என்று சொன்னாள். இதைக்கேட்டவுடன் துகாராம் வெகு வருத்தமடைந்து இவளை இனி வருத்தப்படுத்தப்படாது. சுவாமி எங்கு மிருக்கிறார். அவரைப் பிரார்த்திக்கவும், பஜிக்கவும் இவ்வளவு தூரம் வர வேண்டியதில்லை என்று நினைத்து அன்று முதல் ஏகாந்த மாயிருக்க இவ்வளவு தூரம் வருவதை விட்டார்.

இவ்விதமாக உட்காரும்போதும், நிற்கும்போதும், நடக்கும் போதும், எக்காலத்திலும் சாதுக்களின் வசநங்களை ஸ்மரித்தலே அவருடைய வேலையாயிற்று. பாலியம் முதல் நாமதேவருடைய வச நங்களில் பிரீதியிருந்தாலும் இப்போது அந்த மகானுடைய வசந ங்களைப் பூர்ணமாக மநநம் செய்து கொண்டு வந்தார். இரவும் பக லும் இப்படி அப்பியாசம் செய்து வருகையில் ஒருநாள் இராத்திரி யில் அவருடைய ஸ்வப்நத்தில் நாமதேவரும் விட்டோபாவும் வந்து இவரை எழுப்பி, வால்மீகர் 100 கோடி இராமாயணகிரந்தம் செய்தார். அப்படியே நாமதேவரும் 100 கோடி கவநங்களைச்செய்ய உத்தேசித்தார், 5 கோடி 51 லக்ஷம் கிரந்தங்களைச் செய்தவுடன் நாமதேவர் மரணமடைந்தார், ஆகையால் பாக்கியை நீ செய்யவே ண்டியது, என்பதாய் ஸ்வப்நத்தில் ஆக்ஞாபித்தார்கள். இந்த ஸ்வப் நத்தை நிஜமாகப்பாவித்து மறுநாள் முதல் கவநம் செய்யத்தொடங்

கிஞர். காகிதங்களால் புஸ்தகம் தைத்து தானே எழுதி வைப்பார். எழுதும்அப்பியாசம் இருந்திராதபடியால் எழுத்து பார்வைக்கு நன்ருயிராது. ஆயினும் வந்தபடி எழுதிவைப்பார். முதன்முதலவர் பாடினது பாகவதம் ஏகாதசஸ்கந்தங்களிற் சொல்லிய கிருஷ்ணனுடைய பாலகிரீடை விஷயம். இது 900 கிரந்தம். தன்னுடைய கீர்த்தனைகளையே பாடிக்காட்டுவார். கவநம் செய்யும் சாமர்த்தியம் எவ்வளவு ஏற்பட்டதெனின், பஜனை செய்யும் காலத்தில் சமயத்துக்குத் தக்கபடி நூதந நூதநமாய்க் கவநம் செய்வார். இவைகளைக் கேட்கக் கேட்க ஜநங்களுக்கு இவரிடத்தில் அதிக பிரீதி உண்டாயிற்று. அவர் பாடும்போது அவரிடத்திலே லயம் அடைந்து விடுவார்கள். அவருடைய போதனை எல்லாம் வெகு செவ்வையாக இவர்களின் மநத்தில் பதியும். இவருடைய வாக்சக்தி, கவநம் செய்யும் சக்தி, சுத்தார்த்தக்கரணம், வைராக்கியம், அபாரமான ஈசுவர பக்தி முதலிய குண விசேஷங்களைப் பார்த்து ஜநங்கள் மெல்ல மெல்ல அவரை பூஜ்யராக மதிக்க ஆரம்பித்தார்கள். இவர் சாதாரண மநுஷ்யன் அல்லவென்று சொல்லத் தொடங்கிஞர்கள். அக்கம் பக்கம் ஊர்களில் இருக்கும் ஜநங்கள் இவருடைய கீர்த்தனைகளைக் கேட்க வந்து வெகு கிருதார்த்தர்களாவார்கள். வருஷத்துக்கு இரண்டு தடவை பண்டரபுரத்துக்கு துகாராம் போவார் என்று முன்னமேயே சொல்லி யிருக்கிருேம். அச்சமயங்களில் தான் செய்த கவநங்களைப்பாடுவார். இவருடைய வைராக்கியத்தையும் பாட்டையும்பார்த்துவந்த சாதுக்களெல்லாரும் என்ன மஹான் இவர், என்ன மஹான் இவர் என்று புகழ்வார்கள்.

பிறர்களுடைய பொருமை.

பக்திரஸ பூர்ணமாயும் ஸத்போத பூர்ணமாயு மிருக்கிற துகாராமருடைய கவநங்களைக் கேட்டு ஜநங்கள் அவருடைய பஜனையில் சேர ஆரம்பித்தார்கள். அவருடைய நல்ல சரித்திரம், ஸந்மார்க்கம், கீர்த்தி எங்கும் பிரவிர்த்தித்தன. இவைகள் அதிகமாக அதிகமாக துஷ்ட ஜநங்கள் துவேஷிக்க ஆரம்பித்தார்கள். பத்தரைமாற்றுத் தங்கத்தை எவ்வளவு காய்ச்சிஞலும், அதின் மாற்றுக்

குறைகிறதில்லை, சிரமப்பட்டவர்களின் சிரமம் மட்டும் வியர்த்தமாகிறது போல், துகாராமருடைய கீர்த்தியை எவ்வளவு குறைக்கவேண்டுமென்று துவேஷிகள் இச்சித்தாலும் பலிக்கவில்லை. இதன் விஷயமாய் சில சங்கதிகளைச் சொல்லுவோம். இதனால் துகாராமருடைய வைராக்கியாதிகள் எவ்வளவு தீக்ஷணமா யிருந்தன வென்பது விளங்கும்.

"தேஹூ"(துகாராமருடைய)ஊருக்கு கொஞ்சதூரத்தில்"சிஞ்சவட" என்று ஒரு ஊர் இருந்தது. அவ்வூரில் மம்பாஜி என்ற ஒரு பிராமணன் வசித்தான். அவன் வைராக்கிய மடைந்து கோஸாயி ஆகி தேஹூவுக்கு வந்து சேர்ந்தான். அவ்விடத்தில் ஒரு மடத்தைக் கட்டி தன் சம்சாரத்துடன் வசித்தான். அந்த ஊரிலும் அடுத்த ஊர்களிலும் சில சிஷ்யர்களைச் சேர்த்தான். அவர்களுடைய ஆகாரத்தின் பேரில் ஜீவித்துக் கொண்டு வந்தான். துகாராமரை ஸ்துதித்து அவர் பஜனையில் ஜனங்கள் சேரும்போது அவருக்கு வெகு மனோ வருத்த முண்டாகும். "நான் பார்த்து புஸ்தகங்களைச் சேர்த்து கீர்த்தனங்களைப் பாடம்பண்ணினவன்; இவ்வளவு ஸ்வல்ப:காலத்தில் இவனுடைய கீர்த்தி பரவுதல், பிராமணர்கள் இவனை வந்தனம் செய்தல், அவன் கேவலம் சூத்திரன், நானோபிராமணன், பெயர் போனவன், இப்படி இருக்க அவனை எல்லாரும் புகழ்தலும் என்னை அலக்ஷியம் செய்தலும் நன்றாக இல்லை." இப்படி நினைத்து அந்தப் பிராமணன் துகாராமரை மிகவும் துவேஷிக்க ஆரம்பித்து, எப்படியாவது இவனை பொதுஸ்தலத்தில் அவமானப்படுத்த வேண்டுமென்று மனத்தில் தீர்மானித்தான்.

மம்பாஜி துகாராமருடைய கோயிலுக்குச் சமீபத்தில் சிலமரங்களை வைத்துப் பயிராக்கியிருந்தார். அவலாயி அம்மாளுக்கு அவள் தகப்பனர் ஒரு எருமைமாட்டைக் கொடுத்திருந்தார். அந்தஎருமை மம்பாஜி தோட்டத்தில் நுழைந்து மரங்களைச் சேதம் செய்தது. அவர் கோபித்துக் கொண்டு துகாராமரையும் அவலாயி அம்மாளையும் திட்டினர். துகாராம் இதைக் கவனிக்கவில்லை. பிறகு மம்பாஜி துகாராமருடைய கோயிலை அடுத்து வேலியைக் கட்டினான். அடுத்த ஏகாதசி தினம் ஜனங்கள் வந்த சமயத்தில் பிரதக்ஷிணம்செய்யத் தடை ஏற்பட்டிருப்பதைப் பார்த்து, துகாராம் வேலியைப் பிடுங்கி

வழி செய்தார். இதைக் கண்டு அந்தப்பிராமணன் வெகு கோபங் கொண்டு பிடுங்கி எறிந்த கழிகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு துகாராமரை அடித்தான். ஒரு கழி ஒடிந்து போனால் இன்னும் ஒரு கழி எடுத்து அடிப்பான். இப்படிப் பல கழிகளை உபயோகித்தான். துகாராம் ஒன்றும் பதில் சொல்லவுமில்லை, பேசவுமில்லை; பேசாமல் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டிருந்தார். பிறகு ஜனங்களுக்கு விஷயம் தெரிந்த பிறகு எல்லாரும் மனவருத்தமடைந்தார்கள். அவர்களும் அவலாயி அம்மாளும் உடம்பில் குத்தின முட்களைப் பிடுங்கி சிரமங்களைப் பரிஹரித்தார்கள். சாயங்காலம் வழக்கம்போல் துகாராம் பஜனைக்கு எத்தனித்தார். ஊரிலுள்ள எல்லாரும் வெகுசந்தோஷமாய்க் கீர்த்தனங்களைக் கேட்கஉட்கார்ந்தார்கள். மம்பாஜி பாவா மட்டும் தட்டுப்படவில்லை. அவன் தப்பாமல் வருவது வழக்கம். இப்போது வாராததைக் கண்டு ஏன் தாமஸம் என்பதைப் பார்த்து வரும்படி துகாராம் மனிதனை அனுப்பினார். தனக்கு உடம்பு எல்லாம் வலிக்கிறதென்றும் அதனால் வர முடியவில்லை என்றும் அவன் சொல்லி அனுப்பினான். இதைக்கேட்டவுடன் துகாராம் அவன் வீட்டுக்குப் போய், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, அவன் கைகால்களைப்பிடித்து விட்டு, "சுவாமி! நான் உங்கள் மரங்களுக்குச் சேதம் செய்யாத பட்சத்தில், உங்களுக்குக் கோபம் வந்திருக்கமாட்டாது, என்னையும் அடித்திருக்கமாட்டீர். மன்னிக்கவேண்டும். இப்போது கீர்த்தனைக்கு வரவேண்டும்" என்று சொன்னார். இதைக்கேட்டவுடன் மம்பாஜி வெட்கமடைந்து உடனே எழுந்து பஜனைக்குப் போனான். இந்த திருஷ்டாந்தத்தால் துகாராமருக்கு சத்துரு மித்திரர்களிடத்தில் சமபுத்தி எப்படி யிருந்ததென்பது தெரிய வரும்.

ஒரு காலத்தில் லோஹ என்னும்ஊரில் துகாராம் கீர்த்தனைகளைப் பாடும்சமயத்தில் சில ஸந்நியாஸிகள் அவைகளைக் கேட்க வந்து உட்கார்ந்தார்கள். அப்போது துகாராம் ஜபதபாதிகள் மோக்ஷ சாதனங்கள் ஆகமாட்டா வென்றும், பகவந்நாமஸ்மரணையே முக்கியம் என்றும், ஜனங்கள் பக்திமார்க்கத்தையே ஆசரித்து இதரமார்க்கங்களை துச்சமாக பாவிக்க வேண்டுமென்றும், கேட்பவர்களின் மனத்தில் நன்றாய்ப் பதியும்படி வெகு ஆவேசத்துடன் சொல்லிக் கொண்டு

வந்தார். இதைக்கேட்டு ஸந்நியாஸிகள் மநவருத்தமடைந்து பூனாவுக்குப் போய் அவ்விடத்திய அதிகாரியான தாதோஜீ கோண்டதேவரிடம் தெரியப்படுத்திக் கொண்டதென்ன வெனின், தேஹூகிராமத்தில் துகாராம் என்ற ஒரு சாது இருக்கிறான். அவன் வேதோக்த கர்ம மார்க்கத்தினின்றும் ஜநங்களுடைய மநஸைத் திருப்பி தன்னுடைய கீர்த்தநங்களையே போதித்துக் கொண்டிருக்கிறான். நாம மாஹாத்மியத்தைச் சொல்லிச் சநாதந தர்மத்தை நிஷேதிக்கிறான். அவனைக் கண்டித்து, அந்த அநுசித மார்க்கத்தினின்றும் அவனைத் திருப்ப வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள். துகாராமருடைய யோக்கியதையையும் அவர் சொல்லுவது நல்லது கெட்டது என்பதையும் தாதோஜி கோண்டதேவர் நன்றாய் அறிந்திருந்தார். சந்நியாசிகளின் வசநத்தைக் கேட்டு, கோண்டதேவர், “துகாராமரை வரவழைக்கிறேன், நீங்களும் அவரும் வாதம் செய்யுங்கள். எவர்கள் தோல்வி அடைகிறார்களோ அவர்களைக்கண்டிக்கிறேன்” என்று சொன்னார். இதை சந்நியாசிகள் ஒப்புக்கொண்டார்கள். உடனே துகாராமரை வரவழைத்தார். துகாராம் ‘லோக’ ஊரிலிருந்து சிலஜநங்களுடன் புனாவுக்கு வந்து சேர்ந்து ஊருக்கு வெளியே தகுந்த இடத்தில் இறங்கினார். அவர் வந்த சமாசாரம் தெரிந்தவுடன் அவரிடம் விசுவாசமுள்ள ஜநங்கள் அவரைத் தரிசிக்கப் போனார்கள். அவர்களைப் போல் தாதோஜியும் அவரைப் பார்க்கப் புறப்பட்டார். அப்போது சந்நியாசிகள் ஆக்ஷேபித்தார்கள். அதற்கு அவர் தான் போய் துகாராமரை ஊருக்குள்ளே அழைத்துக்கொண்டு வருவதாயும் பிறகு வாதம் செய்து அவமானப் படுத்தினதின் பேரில் அவரைக்கண்டிக்கிறதாயும் சொல்லி, தாதோஜி புறப்பட்டுப்போய் வெகு ஆதரவுடன் துகாராமரை ஊருக்குள் அழைத்துக் கொண்டு வந்தார். பிறகு துகாராம் பஜனைக்கு நின்றார். அதைக் கேட்க ஊரிலிருந்தவர்கள் வந்தார்கள். அவர்களோடு இந்த சந்நியாசிகளும் வந்தார்கள். துகாராமருடைய அதி பக்திரசத்துடன் கூடின சத்போதத்தைக் கேட்ட பிறகும், துகாராமருடைய விரக்தியைப் பார்த்தும் அவர்களுடைய மநஸ் திரும்பி, துகாராம் சொல்வது வாஸ்தவமே, அவருடைய பக்தி மார்க்கம் மோக்ஷத்தைத் தரக்கூடியதே என்று அவர்களின் மநதில் பட்டது. அவர்களுடைய அபிமாநமெல்லாம் போய் அவர்கள் வெகு

வணக்கமடைந்தார்கள். இதைக் கண்டு தாதோஜி சந்நியாசிகளைப் பார்த்து இப்பேர்ப்பட்ட மஹானை விரோதித்தீர்களே, உங்களைக் கழுதையின் பேரில் வைத்து அவமானம் செய்கிறேன் என்று சொன்னர். துகாராம் மத்தியஸ்தம் செய்ததின் பேரில் அந்த மாதிரியாக அவர் செய்யவில்லை.

சிஞ்சவட என்ற ஊரில் சிந்தாமணிதேவ என்ற பிராமணன் கணபதி உபாசனை செய்துகொண்டிருந்தான். துகாராமருடைய கீர்த்தியைக் கேள்விப்பட்டு, அவரை வரவழைத்து அவருடைய வாஸ்தவமான யோக்கியதையை அறியவேண்டும், டாம்பிகமானுல் சிக்ஷிக்க வேண்டும்; என்று மநதில் நினைத்து, அவரை அழைத்துவர ஒரு மனிதனை அனுப்பினுன். உடனே துகாராம் புறப்பட்டு சிஞ்சவட கிராமத்திற்குப் போய் சிந்தாமணி தேவரைச் சந்தித்தார். இந்தப் பிராமணன் அவரைச் செவ்வையாகப் பரீக்ஷித்தபின் அவருடைய பக்தி வாஸ்தவம் என்று அறிந்து அவரைச் சரணமடைந்து நன்றாக ஆதரித்தான். பிறகு அந்தப் பிராமணன் துகாராமருடைய பக்தனுகி மத்தியில் மத்தியில் அவரை சிஞ்சவட ஊருக்கு வரவழைப்பான்.

துகாராமருடைய கீர்த்தநங்களைக் கேட்க வேண்டு மென்பதாக இதர ஊர்களிலிருந்து ஜநங்கள் கும்பல் கும்பலாய் வருவார்கள். சிலர் தங்களுடைய ஊருக்கே அவரை வெகு ஆதரவுடன் அழைத்துக் கொண்டு போய்க் கேட்பார்கள். இப்படி அவருடைய கீர்த்தியானது எங்கும் பரவிற்று. இதைப் பார்த்து சாஸ்திரிகள், பண்டிதர்கள் அவரை வெகுவாய் துவேஷிக்கத் தொடங்கினுர்கள். இவன் ஜாதியில் சூத்திரன், படிப்பு இல்லாதவன், புதிதாய்க் கவநம் செய்து ஜநங்களுக்குப் பக்தி மார்க்கத்தைப் போதிக்கிறுன். என்பதை யறிந்தவுடன் அவர்களுக்கு வெகு வருத்த முண்டாயிற்று. கவநம் செய்து பக்தி மார்க்கத்தைப் போதிக்கவேண்டியது பிராமணனுடைய காரியமாயிருக்க, சூத்திரன் அப்படிச் செய்து பிராமணர்களைத் தலைகுனிந்திருக்கும்படி செய்தலை அவர்கள் எப்படிச் சகிப்பார்கள்? துகாராமருடைய பெயரைக் கேட்டதாலேயே அவர்களுக்கு உடம்பில் ஒரு தாபம் உண்டாகும். இப்படிப்பட்ட பிராமணர்க

5

ளுக்குள் இராமேசுவர பட்டர் என்றவர் ஒருவர். இவர் புனுவுக்குச்சமீபத்தில் வாகோலி என்ற ஊரிலிருக்கிறவர். இவர் நாலு சாஸ்திரங்களைப் படித்து பிராமணர்களுக்குள் வெகு கௌரவமடைந்திருந்தார். சர்க்காரில் அவருடைய வார்த்தைக்கு வெகு செல்வாக்கு இருந்தது. மற்ற பிராமணர்களுக்குப் போல் இவருக்கும் துகாராமரிடம் வெகு துவேஷ புத்தி யுண்டாகி, தன்னால் கூடின பாதகத்தைச் செய்யவேண்டு மென்று நிச்சயித்தார். அவர் இராஜாவிடம் போய்ச்சொன்னதாவது:—துகாராம் ஜாதியில் சூத்திரனயிருந்தும் சுருதியில் சொல்லிய அர்த்தத்தைத் தன் கீர்த்தநங்களால் ஜநங்ளுக்குப் போதிக்கிறுன். வாஸ்தவத்தில் இந்த வீர்த்தி பிராஹ்மணனுடையதாக இருக்க, தனக்கு அதிகாரமில்லை என்பதைத் தெரிந்து கொள்ளாமல் இந்த விர்த்தியை ஆரம்பித்திருக்கிறுன். இது பெரிய அதர்மம். தன்னுடைய கீர்த்தநங்களால் எவ்வளவு ஜநங்களை மோஹிப்பிக்கிறுன் எனில், பிராஹ்மணர்கள் கூட அவன் காலில் விழுகிறுர்கள். நம்மைப்போன்ற பிராமணர்களுக்கு இது சிலாக்கியமன்று. மேலும் அவன் தன்னுடைய வாக்குப் பலத்தால் வேதத்திற் சொல்லிய ஆசாரத்தினின்றும் ஜநங்களின் சிரத்தையைத் திருப்பி, பக்தி மார்க்கத்தின் மாஹாத்மியத்தை ஸ்தாபிக்கிறுன். இதுவோ சுத்தமாப் பாஷண்ட மதம். என்பதே. இராமேசுவர பட்டருடையவார்த்தையைக் கேட்டவுடன் இராஜா வெகு தாபத்தை அடைந்தார். அச்சமயத்தில் அவர் தேஹு கிராமத்தின் அதிகாரிக்கு, துகாராமரை ஊரிலிருந்து விறட்டி விடும்படி உத்தரவு அனுப்பினர். இந்த உத்தரவு வந்தவுடன் துகாராமருக்கு வெகு விசாரம் வந்தது. எந்தக் கிராமத்தில் எத்தனை வருஷங்கள் வசித்து ஜநங்களைச்சிநேகித்து அவர்களுடைய பிரீதியைச் சம்பாதித்தேனே. எந்த ஊரின் ஜநங்களுடைய பாரமார்த்திக ஹிதத்திற்காக மனோ வாக்கு காயங்களால் உழைப்பதாக நிச்சயம் செய்திருக்கிறேனே, அந்த ஊரை அதிகாரியின் உத்தரவின்படி விட்டுப்போகும்படி நேரிட்டதே என்று வெகு வருத்தமடைந்தார்.

(இன்னும் வரும்.)

A. சிவராவ்.

பிரஹ்மக்ஞாந தர்சநம் (பாலபாடம்.)

(140-ம் பக்கத் தொடர்ச்சி.)

5-வது அத்தியாயம்.

புநர் ஜந்மம்.

நமக்கேற்பட்டிருந்த கடமைகளை நாம் செவ்வையாகச் செய்திருப்போமாகில், அதாவது எது சரியோ அதைச் செய்யக் கொஞ்சம் ஊர்ஜிதமாகப் பிரயாசைப்பட்டிருப்போமாகில் நாம் பூலோகத்துக்குத் திரும்பி வருகிற ஒவ்வொரு காலத்திலும் நமக்கு அதிக நல்லசரீரங்கள் கிடைக்கும். அவைகளை யடைய நாம் பாத்திரர்களாயிருப்போம். மேலும் மானிட சரீரங்களை யுண்டு பண்ணுகிற தேவர்களை நமக்கின்னவித சரீரங்கள் வேண்டுமென்று கூட ஏவுதல் புரிவோம். ஆகையாலிந்த ஜந்மத்திலேயே நாம் ஸந்மார்க்கத்தில் நடக்க முயலுவோமாகில் அடுத்த ஜந்மத்தில் நமக்கு நல்ல பிறப்புக் கிடைக்கும். நமக்கிஷ்டமிருந்தால் நாமப்படிச் செய்துகொள்ளலாம். ஆனால் நம்மிலநேகர் சோம்பேறிகளா யிருக்கிறார்கள். அதனால் மறுஜந்மத்தில் பழைய பாடங்களையே திருப்பி வாசிக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

நாம் பூலோகத்துக்குத் திரும்பி வருகிற ஒவ்வொரு தடவையிலும் நூதந பாடங்களைப் படிக்கவும் நூதந வேலைகளைச் செய்யவும் வருகிறோம். ஆகையால் நாம் அநேகவித மானிட சரீரங்களிலும் பற்பல தேசங்களிலும் பற்பல ஜாதிகளிலும் பற்பல ஸ்திதிகளிலும் வந்து பிறக்கிறோம்.

நாம் செய்யும் தீர்மானங்களில் தவறுகள் செய்யும்போதும் அல்லது நாமிச்சிக்கும்பொருள் நமக்குக் கிடைக்கவேண்டுமென்று நினைத்துத் தப்பிதமான காரியத்தைத் தெரிந்தே நாம் செய்யும்போதும் துன்பத்தை யநுபவிக்கிறோம். அடுத்த ஜந்மத்தில் இப்பேர்ப்பட்ட விஷயங்கள் நமக்கு நேரிடும்போதும் அவைகளைச் செய்யும்படி நமக்குத் தூண்டுதலுண்டாகும்போதும் மநச்சாக்ஷியானது "அதைச் செய்யாதே" என்று சொல்லுகிறது. ஏனெனில் மநச்சாக்ஷி யென்

பது முன் அக்கிரமம் செய்து அதனால் நாமடைந்த துன்பங்களின் ஞாபகமாம்.

நமக்குப் பூர்வ ஜன்மங்களில் நடந்த விஷயங்களின் ஞாபகமிருக்கிறதில்லை. அப்படி ஞாபகமில்லாம லிருப்பது தான் நமக்கு நன்மை. அவைகள் ஞாபகத்துக்கு வருமாகில் நாம் சகிக்கமாட்டோம். ஆனால் நாம் மேலான வகுப்பைச் சேர்ந்து நமக்கு நல்ல விவேகம் வருங்காலத்தில் அவைகள் ஞாபகத்துக்கு வரும். அந்தக்காலம் வரும்வரை மநச்சாக்ஷியே போதுமான ஞாபகமாயிருக்கிறது.

இரண்டு பேர்களுக்கு ஒரேவிதமான மநச்சாக்ஷி யிருக்கமாட்டாது. ஏனெனில் ஒரேவித அநுபவம் இருவருக்கும் நேரிடாது. ஆகையால் நாம் மற்றவர்களிடத்தில் தர்மசிந்தனை யுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் முன் ஜன்மத்தில் வேறுவித அநுபவத்திற் பயின்றவர்களா யிருப்பதால் நம்மைப்போல் அவர்கள் நடவார்கள். நம்முடைய நடத்தை தப்பிதமென்று சொல்ல எப்படியவர்களுக்கு நியாயமில்லையோ அப்படியே அவர்களின் நடத்தை தப்பிதமென்று சொல்ல நமக்கு நியாயமில்லை. "நான் ஸ்வதந்த்ரமாய்ச் செய்யும் காரியங்களை பிறருடைய மநச்சாக்ஷியின்படி ஏன் தீர்மானிக்க வேண்டியது" என்று "பால்" ஞானியார் சொன்னபடி நாம் நடக்க வேண்டியது.

நம்முடைய சரீரங்களின் ஸ்வாதீநம் பெற வேண்டியது முக்கியமான விஷயங்களிலொன்று. சரீரம் நம்முடையது. அது நாமல்ல. அதற்கு எவ்வித ஆகாரம் உத்தமமென்று நமக்குத் தோற்றுகிறதோ அதைக் கொடுத்துப் போஷிக்கவேண்டும். அதற்குத் தேவையானதையெல்லாம் நாம் கொடுக்கக்கூடாது. அதற்குக் கொஞ்சமும் அறிவில்லை. அதை நாம் ஒழுங்காய் வைத்துக்கொண்டா லொழிய அது மிகவும் ஜாஸ்தியாகவாவது மிகவும் குறைவாகவாவது சாப்பிடும், குடிக்கும், தூங்கும்.

சௌக்கியமான சரீரம் நமக்கு வேண்டுமானால் அதற்கு நாம் யஜமானனாயிருக்கவேண்டும். சரீரம் நாமெப்படியப்பியாசப் படுத்துகிறோமோ அப்படி நடக்கிற பிராணியா யிருப்பதால் நாம் கொடுக்கிற

ஆகாரத்தைப் பிரியத்துடன் சாப்பிட வெகு சீக்கிரத்திற் கற்றுக்கொள்ளும்.

அசுத்தமான ஆகாரத்தினுல் நேர்த்தியான சரீரமுண்டாக மாட்டாது. ஆகையால் சுத்தமான ஆகாரத்தையே சாப்பிடக்கவலை யெடுத்துக் கொள்ள வேண்டும். பிராணிகளினிறைச்சி சுத்தமான ஆகாரமன்று. இக்காரணத்தினுல் தான் பிரஹ்மக் ஞாந சபையைச் சேர்ந்த அநேகர்கள் மாமிசத்தைத் தள்ளிவிட்டார்கள். இப்பேர்ப்பட்ட ஜநங்களின் தொகை நாளுக்குநாள் விருத்தியடைந்துகொண்டு வருகிறது.

மதுபாநமும் சரீரத்தை யசுத்தப்படுத்துகிறது. ஆகையால் தங்கள் சரீரங்களைச் சீர்ப்படுத்திக்கொள்ள எண்ணமுள்ளவர்கள் மாமிசத்தையும் மதுபாநத்தையும் தவிர்த்துவிடவேண்டியது. தகுந்த வயதுள்ள மனிதர்களும் ஸ்திரீகளும் தங்களிஷ்டப்படி எதையும் சாப்பிடுவதற்கு யாரும் தடை செய்யப் போகிறதில்லை. ஆனுல் விகாஸமுறையில் நாம் மேன்மைபடைய வேண்டுமானுல் அதாவது கடவுளின் பள்ளிக்கூடத்தில் மேலான வகுப்பைச் சேரவேண்டுமானுல் இந்த ஜந்மத்திலேயே நம்முடைய சரீரங்களைச் சீர்ப்படுத்திக் கொள்ள வேண்டியது. அப்போதுதான் அடுத்த ஜந்மத்தில் நமக்கு நல்ல சரீரம் கிடைக்கும். பந்தயத்துக்கு ஓடுகிறவன் காலில் பளுவான கல்லைக் கட்டிவிட்டால் எப்படி யவன் ஓட முடியாதோ அப்படியே மாமிசம் சாப்பிடுவதும் மதுபாநம் செய்வதும் நாம் முன்னுக்கு வரவிடாமல் தடுக்கும்.

நாம் முன் ஜந்மத்திற் செய்ததற்குத் தகுந்தபடி இந்த ஜந்மத்தில் பலன் நமக்குக் கிடைக்கும். அதற்குக் கர்மமென்று பேயர்.

(இன்னும் வரும்.)

வி. வெங்குசாமி ஐயர்.

புத்தக வரவு.

கந்தபுராண வசனச் சுருக்கம்:—இது மதுராந்தகம் கடப்பேரி சுப்பிரமணிய சிவாசாரியரால் இயற்றப்பெற்று, கும்பகோணம் லோகாநுகூலன் பத்திராதிபர் மகா-௱-௱-ஸ்ரீ ராதாகிருஷ்ண ஐயரவர்களால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. விரிவாய்க் கிடக்கும் ஸ்கந்தபுராணம் இக்காலத்தியருக்குப் பயன்படும்படியாக இலகுவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. நன்றாக அச்சியிற்றியிருக்கிறது. இதன் விலை அணா 8 தான். வேண்டுவோர் ஷை ஐயரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரஹ்ம ஸமாஜ சித்தாந்த சாரசங்கிரகவினுவிடை, சர்வசமய சமரசமான பிரார்த்தனை மாலை:—இவ்விரு புத்தகங்களும் கோயம்புத்தூரிலிருக்கும் மகா-௱-௱-ஸ்ரீ பகடால் நரசிம்மலு நாயுடு அவர்களால் இயற்றப்பட்டவை. பிரஹ்மஸமாஜம் என்பது, 1830-ம் ஷூத்தில் வங்காளத்தில் ராஜா ராம்மோஹன்ராய் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்றது, வங்காளத்தில் அதிகமாய்ப் பரவியிருக்கிறது, சென்னை ராஜதானியில் அவ்வளவாக பிரசாரமாகவில்லை, ஆயினும் அங்குமிங்கும், அந்தச் சம்பிரதாயத்தை அநுஷ்டிக்கிறவர்கள் இந்த ராஜதானியிலும் இருக்கிறார்கள். இப்புத்தகங்களில் ஷை பிரஹ்ம ஸமாஜத்தின் சித்தாந்தங்களும், ஆர்யசநாதந தர்மசாஸ்திரங்களினின்று அநேக நுண்ணிய விஷயங்களும், தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தங்கள், தாயுமானவர் பாடல் முதலானவைகளினின்று அருமையான பாசுரங்களும் எடுத்தாண்டு உபயோகிக்கப் பெற்றிருக்கின்றன. பிரஹ்ம ஸமாஜத்தின் உண்மைகளை அறிகிறது மல்லாமல், பல மதசாஸ்திரங்களின் உண்மைகளையும், இப்புத்தகங்களினின்று இலகுவாய்ப் படிப்பவர் அறிந்துகொள்ளலாம். மகா-௱-௱-ஸ்ரீ நாயுடு அவர்கள் மதசம்பந்தமாக அநேக புத்தகங்களை, மிக ஆராய்ச்சியுடனே பிரசித்தம் செய்திருக்கிறார்கள். இவர்களால் வெளிவந்திருக்கும் புத்தகங்களைப் படித்தாலும் நம்முடைய சாஸ்திரங்களிலும் புராண இதிஹாஸங்களிலும் புலதம்துகிடக்கும் ஞாநரத்நங்களைக் கண்டறியலாம். இவைகள் எளிய தமிழ் நடையில் நன்றாக எழுதப்பட்டுள்ளன. வேண்டுவோர், ஷை நாயுடு அவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இன்னிசை இருநூறு:—இது சோழவந்தானூர் வித்வான் மகா-௱-௱-ஸ்ரீ அ. சண்முகம்பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்று, மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் மகா-௱-௱-ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது. இச்சிறு புத்தகத்தில் சில நீதி விஷயங்கள் வெண்பா நடை

யில், 10 பாட்டுள்ள 20 அதிகாரங்களாக வகுக்கப்பட்டு வெளிப்பட்டிருக்கின்றன. அரும்பதங்களுக்கும் அர்த்தமும் ஒவ்வொரு பக்கத்தினடியிலுங் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இஃது ஒரு உபயோகமான நூல். இதை வேண்டுவோர் ஷை கவிராயரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

குமண சரித்திரம்:—இரண்டாம் பதிப்பு. சேரசோழபாண்டியன் என்ற மூவேந்தர்களைத் தவிர தமிழ் நாட்டின் தமிழ்ப்பாஷையையும் வித்வான்களையும் அபிமானித்தாதரித்த சிற்றரசர்கள் பலருண்டு. அவர்களுள் குமணன் என்பான் அற்புதமான குணமுடைய மேலோன். இவனது சரித்திரம் புறநானூறு சில பாடல்களில் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை ஆதாரமாகக்கொண்டு மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபரான மகா-ா ா-ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் தம் கல்பனு சக்தியால் ஆதியோடந்தமாகக் குமணன் சரித்திரத்தை விருத்தப் பாசுரத்தில் அழகாகச் செய்து முன்னர் பிரசித்தம் பண்ணினார்கள். அப்படி பிரவித்தம் செய்த புத்தகங்கள் செலவாகிவிட்டமையால் ஒவ்வொரு பக்கத்திலும் விஷயக் குறிப்புகளுடனும் அரும்பதங்களின் அர்த்தங்களுடனும் இரண்டாம் பதிப்பு பிரசுரமாகி வெளிவந்திருக்கிறது. பாக்கள் தெளிவாயும் அழகாயும் அமைந்துள்ளன. தமிழ்ப் பாஷையில் சொற்ப பிரக்ஞையுள்ளவர்கள் கூட படித்து ஆநந்திக்கும்படி இப்புஸ்தகம் நடைபெறுகிறது. இதை எல்லாரும் வாங்கி வாசிக்கவேண்டுமென்றே இப்புஸ்தகத்தின் சுருக்கமான வரலாற்றையுங்கூட இங்கு வரையவில்லை. இப்புஸ்தகத்தின் விலை அணு 8. வேண்டுவோர் மதுரை, வித்தியாபாநுப்பத்திராதிபர், மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்களுக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

சமாசாரம்.

சென்ற ஆகஸ்டு 23, 24௳ களில் தெலுங்கு தேசத்திலுள்ள பிரஹ்மஞானக் கிளைச் சங்கங்களின் மகாஸபையின் கூட்டம் நெல்லூர் மாநகரின்கண் மாதுஸ்ரீ அந்நி பெஸண்ட் அம்மையாரின் அக்கிராசநத்தின் கீழ் வெகு உத்ஸாஹம் சிறப்புகளுடன் நடந்தேறியது. சென்னபட்டணமிருந்து ஸ்ரீமாந் ஜட்ஜ் ஸதாசிவ ஐயரவர்களும், ஐரோப்பாக் கண்டம் ஸ்காட்லாண்டு தேசத்திலிருந்து வந்திருந்த ஸ்ரீமாந் க்ராஹம்போல் என்பாரும், மற்று மநேகரும் கூட்டத்திற்கு விஜயம் செய்தார்கள். மாதுஸ்ரீ அம்மையார் 22௳ மாலை கல்

கத்தா மெயில்வண்டியில் நெல்லூர்வந்து சேர்ந்தவுடன் அம்மையாரை அங்கக
ரின் மஹா ஜனங்கள் யாவரும் எதிர்கொண்டு அழைத்தார்கள். மறுநாள் காலை
யில் வேங்கடகிரி ராஜா ஹைஸ்கூல் கட்டிடத்தில் ஸபை கூடியது. அக்கி
ராசனத்தினின்று அம்மையார் மொழிந்தருளிய பிரஸங்கத்தில், தற்காலத்தில்
அறிவுள்ளோர் யாவரும் ஸகல ஸமய நூல்களையும் அன்புடன், ஸகோதர பாவ
மாதும்ஸமரஸ புத்தி நிறைந்து ஆராய்தல் வேண்டுமென வற்புறுத்திக் கூறினர்.

பின்னர் மாலையிலும் அம்மையாரின் பிரஸங்கம், நகரிலுள்ள எக்கட்டி
டத்திலும் கூட்டமடங்காமையால், ஒரு வெளியான ஸ்தலத்தில் நடத்தப்
பெற்றது. இந்தியாவில் பிரஹ்மக்ஞாந ஸபை செய்திருக்கும் காரியங்களைப்
பற்றி இவ்வுபந்யாஸத்தில் அம்மையார் விஸ்தாரமாய்ப் பேசினர். பிரஹ்மக்
ஞாந ஸபையின் முயற்சியால் இந்நாட்டின்கண் விளங்கும் பல மதங்களும்
சோர்வு நீங்கி உத்ஸாஹமும் பிரகாசமும் பெற்றன. இப்பேருபகாரத்தைக்
காட்டிலும் மிகச் சிறந்ததாய் ஓர் நன்மை இம்மகா ஸபையா லிந்நாட்டிற் கேற்
பட்டிருக்கின்றது. அஃதாவது ஐரோப்பியரும் இந்தியரும் உயர்வு தாழ்
வின்றி, ஸமாநமாய் வித்தியாஸமற்று கலந்துறவாடுதலே. இந்நற்காரியத்தை
வேறெந்த ஸபையும் இவ்வளவு தூரம் முடித்திருப்பதாகத் தோன்றவில்லை.
உண்மையில் இப்பாரதகண்ட வாஸிகள் அனைவரும் ஏகோபித்து தேசாபிமாநம்
பெறும்படி செய்வித்து வருகிற காங்கிரஸ் மகாஸபையானது முதலில் இப்
பிரஹ்மக்ஞாந ஸபையைச் சேர்ந்த சிலஐரோப்பிய இந்திய மெம்பர்களாலேயே
ஏற்படுத்தி நடத்தப் பட்டது. இந்நாட்டின் கைத்தொழில் வியாபாராதிகளைப்
பற்றிய சீர்திருத்தங்களை யுண்டுபண்ணும் வண்ணம் நாம் முயற்சித்தல்
வேண்டுமென்பது இம் மஹா சபையாரால் வெகு காலத்தின் முன்னரே உப
தேசிக்கப்பட்டது. காங்கிரஸ் ஸபை ஆரம்பத்தில், இப்பொழுதுபோல் ராஜா
ங்க வியவஹாரங்களில் தலையிடுவதற் கல்லாமல், கைத்தொழில் முதலிய நாட்
டின் பிழைக்கும் வழிகளின் சீர்திருத்தத்தை நோக்கியே ஸ்தாபிக்கப் பெற்றது.

அன்றியும் ஒருவரோடொருவர் வாதுபுரியும் பல மதஸ்தர்கள், பல ஜாதி
யார்கள், அச்சாதிகளின் உள் வகுப்புக்களைச் சேர்ந்தோர் யாவரும் ஸ்நேஹத்
துடன் ஒற்றுமையாய்க் கலந்துறவாடிப் பிறர் பிறர் ஸமய சாஸ்திரங்களையும்
விசாரிப்பவர்களாகி, ஸமரஸ பாவனை யடைந் தாநந்திக்கும்படி செய்து வருவ
தும் இப்புண்ணிய ஸபையின் மஹிமை யன்றோ?

24-ம் தேதியிலும் அம்மையாரின் உபந்யாஸம் நடந்தது. இதில் பிரஹ்
மக் ஞாநத்திற்கும் வித்தியாப்பியாஸ முறைக்குமுள்ள சம்பந்தத்தை அம்மை
யார் நன்கு விளக்கிக் கூறினர். பாடசாலைகளில் மாணாக்கர்களைச் சீர்திருத்தும்
பொருட்டு உபாத்யாயர் பிரம்பு முதலியவற்றாலிடும் சரீர தண்டனை மிக

வும் கொடியதென்றும், காசிமா நகரிலிருக்கும் பிரதான வித்யாசாலையில் தலைமை உபாத்யாயராயிருந்த ஸ்ரீமான் அருண்டேல் என்பார் மேற்கூறிய தண்டனையை நீக்கியே பிள்ளைகள் சகல வொழுக்கத்துடனும் நடந்துகொள்ளு ம்படி செய்துவந்தாரென்றும், ஆதலின் இளைஞர்க்கு அன்பின் உதவியாலன்றி மற்றெவ்வித உபாயத்தாலும் பெற்றோர் உபாத்யாயர்கள் கல்வி கற்பித்தல் உத வாதென்றும், தற்காலத்தில் அன்பின் உதவியால் கல்வி கற்பிக்கப்பெறாமை யால் பெற்றோர் பிள்ளைகளுக்குள் முற் காலங்களிற்போல் அன்பு, மரியாதை விசுவாஸம் இவை நிகழாமலும், சிறுவர் தங்குறைகளைப் பெரியோரிடம் சமய ங்களிற் கூறிக்கொள்ள வியலாமலும், அன்புமாதரவுங் கூறுவாரற்றுத் தாமிறங் கின கெட்டவழியிலேயே யழுந்தி அங்ஙர் சொற்கேட்டுக் கேடுறுகின்றன ரென் றும், இந்நாட்டின் இளைஞர்களது தேஹபலத்திற்கும் வித்யாப்யாஸத்திற்கும் பரம சத்துருவாய் நிற்கும் பால்ய விவாஹம் என்னும் துர்வழக்கம் இன்னும் நீக்கப்படவில்லையே யென்றும், இதற்கு லகுவான ஓர் வழியாவது, பாடசாலை களும் ஸர்வகலாசாலைகளும் விவாஹமான மாணாக்கர்களைச் சேர்ப்பதில்லையெ ன்ற கோட்பாட்டை யங்கீகரித்து நிறைவேற்ற வேண்டியதென்றும், அப்படிச் செய்யின் அதி சீக்கிரத்தில் இப்பெருங்கேடு நம் நாட்டில் ஒழிந்து விடுமென் றும், இக் கருத்துக்களைக் கொண்டே பிரஹ்மக்ஞான ஸபையின் ஆதாவில் வித் யாபிவிருத்தி சங்கம் (Educational Trust) ஒன்று ஏற்படுத்தப்பட்டு அத ன்கீழ் அநேக வித்யாசாலைகள் ஆங்காங்கு அமைக்க பெற்று வருகின்றனவென் றும், அவ்விதமான சாலைகளில் ஒன்றாகிய மதனபள்ளி நகரிலுள்ள பாடசாலை யும் அடுத்த வருஷம் ஓர் கலாசாலையாக (college) உயர்த்தப்படுமென்றும் மொழிந்தனர்.

மற்றும் இந்தக் கூட்டத்தில் கேள்விகளுக்கு விடையளித்தலாகிய ஸம்பா ஷணைகள் மத்தியில் நடத்தப்பட்டன. ஸந்யாஸ ஆசிரமம் தரித்த பிரஹ்மஸ்ரீ ராமசந்திர ராயரவர்களால் ஸ்ரீமான் ஜட்ஜ் ஸதாசிவ ஐயரவர்கள் அக்ராஸந த்தில் "பிரஹ்மக்ஞானமும் இந்து சமயமும்" என்னும் விஷயத்தைப் பற்றி யோர் உபந்யாஸம் நடத்தப்பட்டது. கடைநாளில் முடிவில் ஸ்ரீமான் ராமையா அவர்களும் "லௌகிகன் ஒருவன் ஆத்மக்ஞானம் அடையும் வழி யாது?" என் பதைப்பற்றிப் பிரஸங்கித்தனர்.

இந்தியாவில் வடக்கேயுள்ள டிகாரிராஜ்யத்தின் அதிபதியாகிய மஹாரா ஜா பஹதூர் அவர்கள் பிரஹ்மக்ஞான சபையின் கொள்கைகளை யங்கீகரித்து கயர்மாநகரின்கண் ஓர் பெரிய வித்யாசாலையை ஸ்தாபித்தற்கு 60 ஏகர் நிலம் மேற்கூறிய பிரஹ்மக்ஞான சபையைச்சேர்ந்த வித்தியாபிவிருத்திசங்கத்துக்கு

(Theosophical Educational Trust) நன்கொடையளித்திருக்கின்றனராம். ஆதலின் பிரஹ்மக்ஞானசபையார் வித்தியாவிஷயமாய் இந்நாட்டில் செய்யும் நற்காரியத்திற்கு அநேகம் சிற்றரசர்களின் உதவியும் ஏற்பட்டிருக்கிறதென்று நாம் அறிதல் வேண்டும்.

கோரக்கபுரமென்னும் ஊரிலுள்ள பிரஹ்மக்ஞான கிளைச்சபையின் அங்கத்தினர்கள் இவ் வித்தியாபிவிருத்தி விஷயத்தில் நம்நாட்டிலுள்ள வழிவிலிகள் சிலரின் பழிப்புகளை லக்ஷியம்செய்யாது தைரியத்துடன் பிரஹ்மக்ஞான முறையில் ஒரு கல்லூரியை ஸ்தாபித்தும் நடத்தியும் வருகிறார்கள். சீக்கிரத்தில் அலகாபாத்மாகாணத்தின் சர்வகலாசாலையோடு தம் வித்தியாசாலைக்குச் சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள முயலுவார்கள், இன்னும் அதிகமாய் நிலம்பெற்று கட்டிடவிஸ்தாரங்களும் ஏற்படுத்த யத்தனிப்பார்களாம். இப் பெரும்புண்ணியத்தில் இவர்கட்கு கடவுள் வெற்றியை யருள்வாராக,

---

மகா-ா-ா.ஸ்ரீ அன்னிபெசண்டு அம்மையாரும் ஹிந்து பத்திராதிபரும் சில மத்தியஸ்தர்கள் மூலமாய் சமாதானமாகி சந்தித்து இருவரும் இந்நாட்டின் க்ஷேமத்தைக்கருதி வெவ்வேறுவழியில் உழைப்பவர்களாதலின் நாமிருவரும் சம்மதமாய் தேசக்ஷேமம் நிறைவேறுதலின் பொருட்டு இனிமேல் நேசமடைதல் வேண்டுமெனத் தீர்மானம்செய்துகொண்டனர். ஆதலின் ஒருவர்மேலொருவர் செய்துவந்த வியாஜ்ஜிய விவகாரங்கள்யாவும் நிறுத்தப்பட்டன. இஃது எத்தகைய இந்துதேசாபிமானிகட்கும் ஆநந்தகரமான சமாசாரமே.

பத்திராதிபர்.